# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 288 | சனி, மே 25, 2024 | 15 பக்கங்கள்




## சிறிலங்காவைப் பாதுகாக்கவே இந்தியப்படை அனுப்பப்பட்டது – உண்மை வெளியாகியது

இதனையே தியாக தீபம் திலீபன் அன்றே சொன்னார்!



## தமிழரசின் நழுவல் போக்கும் தமிழ்ப் பொது வேட்பாளரும்...

பேராசிரியர் அமிர்தலிங்கம் செவ்வி



## குஜராத்தில் ஊடுருவிய “ஐ.எஸ்.”

## தேர்தல் நேரத்தில் இலக்கு என்ன?

அகிலன்



## பாலஸ்தீனத்தைப்போல தமிழீழத்தையும் அங்கீகரிக்குமா நோர்வே?

ஆர்த்தீகன்


info@ilakku.org

© 2024 இலக்கு இணையம்

## இராணுவத்திடம் சரணடைந்தோரின் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

போரின் இறுதியில் படையினரிடம் குடும்பமாக சரணடைந்தவர்களின் குழந்தைகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது எனக் கேள்வி எழுப்பியுள்ளார் சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட்.



கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை(21) நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர், "இலங்கையின் உள்நாட்டு போர் முடிவடைந்து 15 வருடங்கள் நிறைவடையும் காலத்தில் எனது பயணம் இடம் பெற்றுள்ளது. மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் அறிவதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன்.

"இலங்கையில் நீதியை நிலைநாட்ட நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவதற்காகவும் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச மன்னிப்பு சபையின் ஆதரவை வழங்கவும் நான் இங்கு வந்துள்ளேன். "முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்கேற்பதற்காக வடக்குக்கு நான் சென்றேன். அப்போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைசந்தித்தேன். அவர்கள் வெளிப்படுத்துகின்ற துணிச்சலும்-மீள் எழுச்சியும்-நீதியை காண்பதற்கான அவர்களின் உறுதிப் பாடும் எனது மனதை தொட்டுள் ளது.

"இலங்கை போரில் மிகப் பெருமளவானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது? காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகமோசமான வன் முறை– அது முடிவுக்கு வராது–

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## போரை எதிர்கொள்ளத் தயாராகும் பிரித்தானியா

சில தினங்களுக்கு போதுமான உணவு மற்றும் தண்ணீர் ஆகியவற்றை சேமித்து வைக்குமாறு பிரித்தானியா அரசு தனது மக்களை கேட்டுள்ளது மக்களிடம் அச்சத்தையும் பலத்த சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.




இதற்காக பிரித்தானியா அரசினால் பிரத்தியோகமாக உருவாக்கப்பட்ட இணையத்தளத்தில் அதன் துணைப் பிரதமர் ஒலிவர் டொவ்டன் இது குறித்த அறிவித்தலையும் ஆலோசனைகளையும் வெளியிட்டுள்ளார்.

மக்கள் தமது பாதுகாப்பை முற்றாக அரசிடம் ஒப்படைக்க முடியாது. அவர்களும் எந்த சூழ்நிலையையும் சமாளிக்க தயாராக வேண்டும் இயற்கை அனர்த்தில் இருந்து போர் வரையிலான அனர்த்தங்களுக்கான ஏதுநிலைகள் அதிகரித்து வருகின்றது. எனவே சைபர் தாக்குதல், வெள்ளப் பெருக்கு, மின்சாரம் அற்றநிலை, புதிய உயிரியல் தாக்குதல், புதிய தொற்றுநோய், மற்றும் சூரியனில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்களால் நாம் பாதிப்படையலாம் எனவே அதனை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் என டொவ்டன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## தாய்வானைச் சுற்றி மிகப்பெரும் படைத்துறை ஒத்திகை

சீனாவின் தரைப்படை, வான் படை, கடற்படை மற்றும் ஏவுகணைப் படையினர் இணைந்து தைவானைச் சுற்றி மிகப்பெரும் படைத்துறை ஒத்திகை ஒன்றை சீனா கடந்த வியாழக்கிழமை(23) மேற்கொண்டிருந்தது.



தாய்வானின் தனிநாட்டு பிரகடனம் தொடர்பில் பேசுபவர்களுக்கான எச்சரிக்கையும், தண்டனையும் என்ற குறிக்கோளுடன்இது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் துல்லியமாக இலக்குகளைத் தாக்கும் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் சீனா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தாய்வானின் கட்டளைப்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## காற்றாலையால் மன்னாரில் மீனவர்கள் கடுமையாக பாதிப்பு–சுமந்திரன்



காற்றாலை மின் உற்பத்திக்கு மன்னார் பொருத்தமான பிரதேசம் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இன்று தெரிவித்தார்.

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் ஏற்பாடு செய்த விசேட கூட்டம் இன்று காலை மன்னாரில் இடம் பெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"காற்றாலை மின்சாரத் திட்டம் அமைக்கலாம். ஆனால், அதற்கான உகந்த இடங்களை தெரிவு செய்து முன்னெடுக்க வேண்டும். மன்னார்த் தீவு என்பது கடல் மட்டத்தில் இருந்து சற்று உயரம் குறைவான இடத்தில் காணப்படுகின்றது. இத்தீவு இச்செயல் திட்டத்திற்கு பொருத்தமானதாக இல்லை. மன்னாரில் இரண்டு பாரிய அச்சுறுத்தல்களை மக்கள் எதிர்கொள்கின்றார்கள்.

காற்றாலை அமைக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் செயல் திட்டத்தில் மூன்று திட்டங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. காற்றாலை அமைப்பதன் மூலம் இப்பிரதேசங்களில் ஏற்படுகின்ற பல விதமான பாதிப்புக்களை மக்கள் ஏற்கனவே

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பாலஸ்தீனத்தில் தூதரகத்தை திறப்பதற்கு தயாராகும் கொலம்பியா



பாலஸ்தீனத்தின் ரமலா பகுதியில் தனது நாட்டின் தூதரகத்தை திறந்து அதில் அதிகாரிகளை பணியில் ஈடுபடவைப்பதே தனது அடுத்த திட்டம் எனவும் அது தொடர்பில் வெளிவிவகார அமைச்சரை பணித்துள்ளதாகவும் கொலம்பியாவின் அரச தலைவர் கொஸ்ரோவ் பெற்ரோ கடந்த புதன்கிழமை(22) தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தின் அங்கீகாரத்திற்கு கொலம்பியா ஆதரவு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இலங்கையின் கிரபைட் கனிமன வளத்தை கைப்பற்ற இந்தியா முயற்சி

இலங்கையில் உள்ள கிரபைற் எனப்படும் கார்பன் இரசாயண மூலகம் கொண்ட கனிம வளங்களை அகழ்ந்தெடுக்கும் உரிமத்தைப் பெறுவதற்கு இந்தியா முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மின்சார கார்களின் மின்கலங்களின் கடத்திகளாக கிரபைட் பயன்படுத்தப்படுவதால்அதற்கான பெறுமதி உலகில் அதிகரித்து வருகின்றது. இலங்கையில் நல்ல தரமான கிரபைட் கனிம வளங்கள் உள்ளன. எனவே அவற்றை கையகப்படுத்தும் நோக்கத்துடன் இந்தியா இலங்கையுடன் பேச்சக்களை மேற்கொண்டு வருகின்றது.



பேச்சுக்கள் ஆரம்பகட்ட நிலையில் உள்ளதால் அது தொடர்பான மேலதிக விபரங்களை வெளியிட முடியாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மிக முக்கிய 30 கனிமப்பொருட்களின் பட்டியிலை கடந்த வருடம் இந்தியா

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## வெற்றிக்காக பெரும் தொகை பணத்தை செலவிடும் பி.ஜே.பி அரசு

இந்தியாவில் இடம்பெற்று வரும் பொதுத் தேர்தலில் தமது வெற்றிக்காக கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து தற்போதைய ஆளும் பாரதிய ஜனதா கட்சி பெருமளவான பணத்தை சமூக வலைத்தளங்களில் செலவிட்டு வருவதாக அல்ஜசீரா ஊடகம் தனது செய்தி ஆய்வில் தெரிவித்துள்ளது.

மோடியின் வெற்றி உறுதி என்ற கோசத்துடன், எதிர்க்கட்சி கூட்டணிக்கு எதிராக இந்த பிரச்சாரம் மிகப்பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்படுகின்றது. கூகுள் இணையத்தளத்தில் மிகுந்த



செலவில் பி.ஜே.பி தனது விளம்பரங்களை முன்னெடுத்து வருகின்றது. அதேசமயம் அவ்வாறானதொரு குரல் பதிவு விளம்பரத்தை மேலும் ஒரு நிறுவனமும் முன்னெடுத்து வருகின்றது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மட்டக்களப்பில் தொடர்ந்து பறிபோகும் தமிழர் நிலம்

மட்டக்களப்பை சிங்கள மயமாக்கலின் அடிப்படையில் எல்லைக் கிராமமான கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வடமுனை கிராம சேவகர்பிரில் உள்ள நெலுகல் மலை எனப்படுகின்ற மலையில் எமது மாவட்டத்தின் இரு இராஜாங்க அமைச்சர்களின் ஆசீர்வாதத்துடன் நெலுகல்மலை கிறீன் விகாரை எனும் பெயரில் புதிதாக விகாரை கட்டும் பணி திருகோணமலை சோமவதி விகாரை விகாராதிபதி தலைமையில் இடம்பெற்று வருகின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.





மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி காரியாலயத்தில் புதன்கிழமை(22) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். திட்டமிட்ட அடிப்படையிலே கிழக்கு சிங்கள தேசத்துக்குள் படிப்படியாக கரைந்து கொண்டிருக்கின்றது அம்பாறை. திருகோணமலை மாவட்டம் முழுவதுமாக சிங்கள தேசத்தின் திட்ட மிட்ட அபகரிப்பு உட்பட்டு தமிழ் மக்கள் கையில் இருந்து விடுவிக்கப்படுகின்ற மிகப் பெரிய ஆபத்தான நிலைக்கு போயிருக்கின்றது.

அதன் அடுத்த கட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இதில் எல்லைப்புற கிராமங்கள் சிங்கள தேசத்தினாலும் பெரும்பான்மை இனத்தவர்களால் குறிவைக்கப்பட்டு எல்லைக் கிராமங்கள் அபகரிக்கும் செயற்பாடுகள் படிப்படியாக நடந்தேறிவருகின்றது.

அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள வடமுனை கிராமசேவகர் பிரிவிலுள்ள நெலுகல் மலையில் எனப்படுகின்ற குடும்பி மலையின் பின்பகுதியான இந்த மலையில் நெலுகல்மலை கிறீன் விகாரை எனும் பெயரில் விகாரை கட்டும் பணியை திருகோணமலை சோமவதி விகாரை விகாராதிபதி தலைமையில் இடம் பெற்று வருகின்றது.

இந்த பகுதியில் பாரிய கட்டிடம் அமைக்கப்பட்டு அதில் இருந்துகொண்டு கட்டுமானப்பணியில் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதன்நோக்கம் கிழக்கு மாகாணத்தை முற்று முழுதாக சிங்கள பௌத்த தேசத்துக்குள் கரைப் பதற்கான நடவடிக்கையாக பார்க்கின்றோம் வடக்கில் குருந்தூர் மலை வெடுக்குநாறி மலை, கையகப்படுத்தப்பட்டுள்ள இந்த வேளையிலே கிழக்கு மண் சத்தம் இல்லாமல் பறிபோய் கொண்டிருக்கின்றது.

மயிலத்தமடு மேச்சல்தரையில் ரவுண்டப் எனும் புல்லுக்கு அடிக்கும் மருந்தையடித்து மேச்சல் புல்தரைகள் அழிக்கப்பட்டு 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட மேச்சல் தரை காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளது அதேவேளை மகாவலி ஏ வலயத்துக்குரிய வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பெரும்பான்மை இனத் தவர்களை குடியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

அந்தப் பண்ணையாளர்கள் தொடர்ந்து அச்சுறுத்தி அங்கிருந்து அவர்களை வெளியேற்றுகின்ற நடவடிக்கைகள் கச்சிதமாக மேற்கொள்ளப் பட்டுவருகின்றது இந்த நடவடிக்கைகளுக்கு யார் காரணம் என்பதை மக்கள் மிகத் தெளிவாக விளங்கி கொள்ள வேண்டும்.

இந்த மாவட்டத்தில் 2 இராஜாங்க அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்களுடைய பணி சிங்கள தேசத்தினுடைய நிகழ்சி நிரலை அமுல்படுத்துவதுதான்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

## ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்கிச் சிறிலங்கா இராணுவத்தைப் பாதுகாக்கவே இந்தியப்படை அனுப்பப்பட்டது

இந்தோ சிறிலங்கா ஒப்பந்தம் கைச்சாத்தாகி 37 ஆண்டுகளின் பின்னர், முன்னாள் மாநிலங்கள் அவை உறுப்பினரும் முன்னாள் இந்திய மத்திய அமைச்சருமான மணி சங்கர் அய்யர் எழுதியுள்ள 'நான் அறிந்த ராஜீவ்' ('The Rajiv I know') என்னும் நூலைக் கடந்த வாரத்தில் வெளியிட்டுள்ளார். இந்நூலில் சிறிலங்காவின் அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா இந்தோ சிறிலங்கா ஒப்பந்தம் கையெழுத்தானவுடனேயே அருகிலிருந்த அறைக்கு ராஜீவ் காந்தியை அழைத்துச் சென்று, "நாட்டின் தெற்கு வடக்கு என்ற இருமுனைகளிலும் நிகழும் இருவேறு உள்நாட்டுக் கலவரங்களையும், கொழும்பில் நடக்கும் வன்முறைகளையும் சிறிலங்கா இராணுவத்தால் சமாளிக்க முடியாது. ஆகவே ஆயுதம் ஏந்திய தமிழ்க் குழுக்களிடம் இருந்து சிறிலங்கா இராணுவத்தைப் பாதுகாக்க ஒரு அமைதி காக்கும் படையை இந்தியா அனுப்ப வேண்டும்" என்று விடுத்த வேண்டுகோளே, இந்தியா சிறிலங்காவுக்குத் ஈழத்தமிழரின் தாயகப்பகுதிகளைக் கட்டுப்படுத்தத் தனது இராணுவத்தை அனுப்பும் முடிவை எடுக்க வைத்தது என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

அன்றைய சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தன் மூத்த அமைச்சர்களின் எதிர்ப்பையும் மீறிச் சிறிலங்காவின் அரசியலமைப்பைத் திருத்த ஒப்புக் கொண்டதற்காக ராஜீவ்காந்தி இதனைச் செய்ய வேண்டும் என்று கூறியதும் ராஜீவ்காந்தி அறைக்கு வெளியில் இருந்த தனது நிபுணர்களைக் கூட கலந்தாலோசிக்காது ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வேண்டுகோளுக்கு ஒப்புதல் அளித்தார் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள இந்திய முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர், முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களின் "சிறிலங்கா அரசே கேட்டுக் கொண்டாலும் இந்தியா இலங்கையில் இராணுவ ரீதியாகத் தலையிட மாட்டாது" என்ற நிலைப்பாடு மீறப்பட்டு இந்தியப்படைகளை அனுப்ப ராஜீவ்காந்தி வழங்கிய ஒப்புதலால் இந்தியாவிலிருந்த நிபுணர்களும் ஆச்சரியமடைந்ததாகவும், குறிப்பிட்டுள்ளார்.

கூடவே இலங்கையில் 24 மணிநேரத்துள் தரையிறக்கப்பட்ட இந்தியப்படையின் தளபதிகளுக்கோ படையினருக்கோ இலங்கையின் களநிலவரம் குறித்து எவ்விதி தகவல்களும் அளிக்கப்படாது அவசரமாக இந்தத் தரையிறக்கம் நடைபெற்றது என்பதையும், அமைதிப்படை தரையிறங்கியது முதல் விடுதலைப் புலிகளுடனான மோதல்கள் தொடங்குவதற்கும் இடையில் இருந்த இரண்டு மாத காலத்தைக் கூட இந்தியா பயன்படுத்தவில்லையென்று குறிப்பிட்டுள்ள முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர் இதுவே சிறிலங்கா இராணுவத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையில் அமைதி காக்கும் படையாக இருந்திருக்க வேண்டிய இந்திய அமைதி காக்கும் படை தமிழ்ப்போராளிகளோடு மோதவேண்டியதாயிற்று என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். இது இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியை 'இந்தியாவின் வியட்நாம்' ஆக மாற்றியது என அரசியல் மொழியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிய அதே வாரத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரை டில்லிக்கு அழைத்து அசோகா ஹோட்டலில் பலத்த பாதுகாப்பில் தங்க வைத்து இந்த ஒப்பந்தத்தின் பிரதியைக் கையளித்த போதே அவரைச் சந்திக்கச் சென்ற பத்திரிகையாளர் அனிதா பிரதாப்பிடம் அந்த ஒப்பந்தம் தமக்கு ஏற்புடையதல்ல எனத் தெளிவாகக் கூறியனுப்பினார் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர் "நாங்கள் இந்தியாவையும் அதன் மக்களையும் நேசிக்கின்றோம். ஆனால் தமிழீழத்தை அடையும் இலட்சியத்திற்காகத் தொடர்ந்து போராடுவோம்" எனப் பிரபாகரன் கூறித் தனது இலட்சியத்தில் மிக உறுதியாக இருந்தார் என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார். மேலும் 72 மணித்தியாலங்கள் முதல் 15 நாட்களுக்குள் விடுதலைப்புலிகளைச் சுற்றி வளைக்கலாம் என்ற இந்திய இராணுவத்தின் ஆரம்பக் கணிப்பு, 05.10. 1987 இல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த இந்திய இராணுவ ஜெனரல் சுந்தர்ஜி 'ஆபரேசன் பவன்' மூலம் மூன்று நான்கு வாரங்களில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைப் பறிக்க முயற்சித்தமை, திடீரென இராணுவ உலங்கு வானூர்திகளில் வந்திறங்கி விடுதலைப்புலிகளின் தலைவர்கள் அனைவரையும் பிடிக்கத் திட்டமிட்டது போன்ற பல இராணுவ முயற்சிகளிலும் இந்தியப் படையினர் தோல்வியே அடைந்த வரலாற்றை மீள் நினைவுபடுத்தியுள்ளார். அத்துடன் முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர், அந்தக் காலத்தில் சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் ஜே. என் தீக்ஷித் "பிரபாகரன் அவர்களுக்கு தமிழீழம் மீதிருந்த பற்றுதியையும், திட்டமிடுவதில் அவருக்கு இருந்த புத்திசாலித்தனத்தையும், எதிர்த்து நிற்பதில் அவரின் பேராற்றலையும், ஒற்றை நோக்கில் அவர் மிக்க உறுதியுடன் செயற்பட்டதையும், மிகக் குறைவாக மதிப்பிட்டு விட்டோம். தமிழர்களுக்காக இறங்கி வருவதில் ஜெயவர்தனாவுக்கு இருந்த அரசியல் உறுதியையும் நேர்மைத்தனத்தையும் அதிகமாக மதிப்பிட்டு விட்டோம். இலங்கைத் தமிழர்களிடம் இருந்து புலிகளைத் தனியாகப் பிரித்துவிட முடியும் என்ற எனது நம்பிக்கையும் பொய்த்துப் போனது." எனத் தனது பணிகள் குறித்துச் செய்த பதிவுகளையும் மீள்நினைவுபடுத்தியுள்ளார்.

இந்நூல் இந்தியா ஈழத்தமிழர்களின் இறைமையின் அடிப்படையில் அவர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை அவர்கள் அடைந்து வாழ்வதற்கு உதவும் நோக்கைக் கொண்டிருக்கவில்லை என்பதை மீள உறுதி செய்துள்ளது. இந்த உண்மையை அன்றே தியாகி திலீபன் சமகாலத்தில் வெளிப்படுத்தினார். இந்நூல் வெளிவந்துள்ள சமகாலத்தில் "தங்களுடைய தன்னாட்சியைப் பயன்படுத்தி வாழ இயலாத எல்லைகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கான தங்கள் ஒற்றுமையை" வெளிப்படுத்தும் ஐக்கியநாடுகள் சபையின் வாரமும் மே 25 முதல் 31 வரை இடம்பெறுகிறது. இவ்வாண்டுத் தொடக்கத்தில் தமிழ்த்தேசிய முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் இவ்வாண்டுத் தொடக்கத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஈழத்தமிழர்களும் தங்களின் தன்னாட்சியைப் பயன்படுத்தி வாழ இயலாத எல்லைகளில் வாழும் மக்களாகவே பிரித்தானிய காலனித்துவத்தால் தள்ளப்பட்டுள்ள இன்றைய நிலையில் ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழர்களுக்கான சிறப்புப் பிரதிநிதியொருவரை நியமித்து ஈழத்தமிழர்கள் தங்கள் தன்னாட்சியின் அடிப்படையில் வாழ்வதை உறுதி செய்ய வேண்டுமெனக் கோரியிருந்தார். இந்தச் சிறப்புப் பிரதிநிதியின் தேவையை இந்திய முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யரின் நூல் உலகுக்கு மேலும் தெளிவாக்கியுள்ளது. அதாவது பிராந்திய மேலாண்மைகளோ உலக வல்லாண்மைகளோ தங்கள் நலன்சார் நிலைப்பாட்டையே அதீத மனிதாயத் தேவையில் உள்ள ஈழத்தமிழர்களைப் பொறுத்தமட்டில் எடுப்பர். இதுவே இந்திய முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யரின் நூல் தரும் சான்றாகவும் உள்ளது. எனவே தாயகத்திலும் உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் தாங்கள் இலங்கைத் தீவின் இறைமையுள்ள மக்கள் என்பதை உறுதியுடன் வெளிப்படுத்தி ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பிரதிநிதி ஒருவரின் மேற்பார்வையில் தங்களின் தாயக எல்லைகளில் தங்களின் தன்னாட்சி உரிமையுடன் தங்கள் வாழ்வை முன்னெடுக்க உழைக்க வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார அழைப்பாக உள்ளது. பலஸ்தீனர்களின் அரசநிலைக்காக ஸ்பெய்ன், அயர்லாந்து, நோர்வே நாடுகளின் அங்கீகாரம் மே 28 இல் தொடங்கவுள்ள நேரத்தில் ஈழத்தமிழர்களும் தங்கள் தாயகத்துக்கான உலக அங்கீகாரத்தை நோக்கிய கோரிக்கையைப் பலப்படுத்த வேண்டும் என்பதே இலக்கின் உறுதியான எண்ணம். மக்கள் போராட்டத்தின் மூலமே விடுதலை என்ற தியாகி திலீபனின் சிந்தனை, பலஸ்தீன மக்களைப் பொறுத்த மட்டில் உண்மையாகி எமக்கான மீள்அழைப்பாகிறது என்பதை இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

ஆசிரியர்



# குஜராத்தில் ஊடுருவிய "ஐ.எஸ்."

## தேர்தல் நேரத்தில் இலக்கு என்ன?

இந்தியாவும், இலங்கையும் தேர்தல்களை எதிர்கொண்டிருக்கும் நிலையில், கொழும்பிலிருந்து சென்னையூடாக குஜராத் சென்ற ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் இலக்கு என்னவாக இருந்தது? இது தொடர்பில் வெளிவரும் தகவல்கள் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஊடுருவியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் இலங்கையிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. காரணம் - கைதான நால்வரும் இலங்கையர்கள். கொழும்பிலிருந்து சென்னை சென்று அங்கிருந்து அஹமதாபாத் விமான நிலையத்தில் இறங்கி குஜராத்துக்குள் செல்வதற்கு முற்பட்டபோதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். பாரிய தாக்குதல் திட்டங்களுடனேயே அவர்கள் வந்திருந்ததாகவும், இந்திய புலனாய்வு அமைப்புக்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இந்தச் சம்பவம் இலங்கையிலும், இந்தியாவிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன.

இந்தியாவில் கட்டம் கட்டமாக பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இலங்கையிலும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. 2019 இல் இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரால் நடத்தப்பட்ட ஈஸ்டர் தினத் தாக்குதல் அவ்வருட இறுதியில் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாவதற்கு அந்தச் சம்பவம் காரணமாகியது. அதேகாலப்பகுதியில் இந்தியாவும் தேர்தலை எதிர்நோக்கியிருந்தது.



இப்போது இரு நாடுகளும் தேர்தலுக்கான ஆயுதங்களில் உள்ள நிலையில், இலங்கையைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டிருப்பதாக வரும் தகவல்கள் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருப்பதற்கு முன்னைய அனுபவம்தான் காரணம். அஹமதாபாத் விமான நிலையத்துக்கு குண்டுத் தாக்குதல் குறித்த அச்சுறுத்தல் வெளிவந்திருந்த ஒரு பின்னணியில்தான் இந்தக் கைதுகள் இடம் பெற்றது. குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் உஷார் படுத்தப்பட்டிருந்த நிலையில், நால்வரும் விமான நிலையத்தில் வந்திறங்கிய நிலையில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த நான்கு பேரும் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதாவது 19 ஆம் திகதி சென்னையில் இருந்து அகமதாபாத் செல்லும் இண்டிகோ விமானத்தில் ஏறியதாக குஜராத் காவல்துறை தலைமை இயக்குனர் விகாஷ் சஹய் தெரிவித்தார். "தென் பிராந்தியத்திலிருந்து வரும் பயணிகளின் பட்டியலை சரிபார்த்து, கொழும்பில் உள்ள அதிகாரிகளால் அவர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்திய பின்னரே கைது செய்யப்பட்டனர்" என்றும் அவர் கூறினார். இந்திய அதிகாரிகள் இலங்கையுடன் இவ்விடயத்தில் நெருக்கமான தொடர்பில் உள்ளார்கள் என்பதை இது உறுதிப் படுத்துகின்றது.

நான்கு பேரும் "பாகிஸ்தானில் உள்ள அபு என்ற நபருடன் சமூக ஊடகங்கள் மூலம் தொடர்பு கொண்டிருந்தனர்" என்றும் குஜராத் பொலிஸார் தெரிவித்தனர். "இந்தியாவில் பயங்கரவாத தாக்குதலை நடத்த அபு அவர்களை ஊக்குவித்தார். அவர்கள் மிகவும் தீவிரமானவர்கள், அவர்களும் தற்கொலை குண்டுவெடிப்புக்கு ஒப்புக்கொண்டனர். அவர்களது மொபைல் போன்களை ஸ்கான் செய்ததில், சில ஆயுதங்களின் புகைப்படங்கள் மற்றும் அகமதாபாத் அருகே நானாசிலோடாவின் இருப்பிடத் தரவுகள் கிடைத்ததாகவும் புலனாய்வாளர்கள் தெரிவித்தனர்.

புகைப்படங்களில் குறிப்பிடப்பட்டுள்ள படி, நானாசிலோடா பகுதியில் இருந்து மூன்று பாகிஸ்தான் துப்பாக்கிகள் மற்றும் 20 தோட்டாக்களை பயங்கரவாத தடுப்புப் பிரிவு பின்னர் மீட்டெடுத்தது" என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த ஆயுதங்கள் பாகிஸ்தானியர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் ஐஎஸ்ஐஎஸ் தலைவர்களுடன் இரகசிய குறியீடுகள் மூலமாக மின்னஞ்சல் சேவையைப் பயன்படுத்தி தொடர்பு கொண்டிருந்ததாக விசாரணைகளை அதிகாரிகள் தெரிவித்தனர்.

முகமது நுஸ்ரத் (33), முகமது ஃபரிஷ் (35), முகமது நஃப்ரான் (27) மற்றும் முகமது ரஷ்தீன் (43) ஆகிய சந்தேக நபர்கள் யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் உறுப்பினர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் நோக்கத்துடனேயே குஜராத்தில் வந்திறங்கியதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உட்பட பா.ஜ.க.வின் முக்கிய தலைவர்கள் பலரும் குஜராத்தைத் தளமாகக் கொண்டவர்கள்.

மே 12 ஆம் தேதி அகமதாபாத் விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் மின்னஞ்சலில் வந்தது, பாதுகாப்புப் பணியாளர்கள் விமான நிலைய வளாகத்தில் சோதனை நடத்திய பிறகு அது புரளி என்று மாறியது. ஆனால் சந்தேகத்திற்குரிய எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவு தொடர்ந்தும் உஷாராக இருந்ததுடன், தென்னிந்தியாவிலிருந்து வருபவர்கள் குறித்து மிகவும் விழிப்புடன் இருந்தார்கள்.

இந்தக் கைதுகள் இலங்கையிலும் எதிரொலித்திருக்கின்றது. இலங்கையிலும் புலனாய்வு அமைப்புகள் புதிய விசாரணையை ஆரம்பித்துள்ளன. அகமதாபாத்தில் கைது செய்யப்பட்டவர்களின் பின்னணி மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் உடன் அவர்களுக்கு இருந்ததாகக் கூறப்படும்

**அகிலன்**

தொடர்புகளை அடையாளம் காண இலங்கையின் அரச புலனாய்வுப் பிரிவானது அவர்களது இந்திய சகாக்களிடமிருந்து கூடுதல் விவரங்களைக் கோரியுள்ளது.



இலங்கையின் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், நாட்டின் பாதுகாப்பு பிரிவுகள் நிலைமைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவித்தார். "எந்தவொரு சாத்தியமான அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக நாங்கள் எங்கள் இந்திய சகாக்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில் பணியாற்றி வருகிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, ஈஸ்டர் ஞாயிறு அன்று இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். குண்டுதாரிகள் தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியது, இதில் 45 வெளிநாட்டவர்கள் உட்பட 270 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மூன்று தேவாலயங்கள் மற்றும் பல ஹோட்டல்கள் மீதான ஒருங்கிணைந்த குண்டுத் தாக்குதல்களுக்கு சில வாரங்களுக்கு முன்னர், இந்திய உளவுத்துறை அமைப்புகள், இஸ்லாமிய அரசின் இத்தகைய தற்கொலைத் தாக்குதல்களை நடத்தும் திட்டம் குறித்து இலங்கை சகாக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன. ஆனால், இலங்கை அதிகாரிகள் இந்த எச்சரிக்கைகளை புறக்கணித்தனர். அதன் விளைவை நாடு பின்னர் எதிர்கொண்டது.

இந்தப் பின்னணியில்தான் தற்போது அஹமதாபாத்தில் இடம்பெற்ற கைதுகளும், அது குறித்து வெளிவரும் செய்திகளும் கொழும்பு அரசியலிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கின்றது. இது குறித்த விசாரணைகளுக்காக பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோனினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோரின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திலும் இந்த விவகாரம் எதிரொலித்திருக்கின்றது. "இஸ்லாமிய

தொடர்ச்சி 09ஆம் பக்கம்



# பாலஸ்தீனத்தைப்போல தமிழீழத்தையும் அங்கீகரிக்குமா நோர்வே?

ஆர்த்திகன்

பாலஸ்தீனத்திற்கான அங்கீகாரத்தை நோர்வே, அயர்லாந்து மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் கடந்த புதன்கிழமை(22) அறிவித்துள்ளன. ரஸ்யாவும் 1988 ஆம் ஆண்டு மேற்கொண்ட தனது முடிவில் மாற்றமில்லை என அறிவித்துள்ளது. அதாவது சுதந்திர பாலஸ்தீனம் என்ற தீர்வுக்கான அங்கீகாரம் அது. நோர்வேயின் அறிவிப்பைத் தொடர்ந்து மோல்ட்டா, ஸ்லோவேனியா மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளும் தமது அங்கீகாரத்தை வழங்கலாம் என கூறப்படுகின்றது.



ரஸ்யாவின் நாடாளுமன்றப் பேச்சாளர் கூறுவது போல பாலஸ்தீனம் என்ற நாட்டுக்கான அங்கீகாரம் என்பது 1967 ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட எல்லைகளின் அடிப்படையாக கொண்டது. ஆனால் இந்த நாடுகளின் முடிவை இஸ்ரேல் கடுமையாக எதிர்க்கின்றது. இந்த நாடுகள் ஹமாஸிற்கும், ஈரானுக்கும் வெற்றியை கொடுக்க முனைகின்றன, இது பயங்கரவாதத்திற்கு கிடைத்த வெற்றி என்ற வாதங்களை இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் முன்வைத்தாலும் அது தற்போதைய உலக அரங்கில் அதிக கவனத்தைப் பெறவில்லை. ஏனெனில் இஸ்ரேலிய அமைச்சர் பேசிமுடித்த சில நிமிடங்களில் ஸ்பெயின் தனது அங்கீகாரத்தை வெளியிட்டிருந்தது.

இந்த நாடுகளின் அறிவிப்புக்கு அப்பால் சில வாரங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற்ற பாலஸ்தீனத்திற்கான நிரந்தர உறுப்புரிமை தொடர்பான வாக்கெடுப்பில் உலகில் உள்ள 193 நாடுகளில் 143 நாடுகள் ஆதரவாக வாக்களித்தது என்பது உலகில் உள்ள பெரும்பாலான நாடுகள் அதற்கான அங்கீகாரத்தை வழங்கியதாகவே கொள்ளப்படுகின்றது. சீனா, இந்தியா, மெக்சிகோ, இந்தோனேசியா, பிரேசில், தென்னாபிரிக்கா மற்றும் துருக்கி உட்பட ஜி-20 பொருளாதாரக் கூட்டமைப்பில் உள்ள அரைவாசிக்கு மேற்பட்ட நாடுகள் பாலஸ்தீனத்திற்கான அங்கீகாரத்தை ஏற்கனவே வழங்கியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகளில் 7 நாடுகள் பாலஸ்தீனத்தை 1988 ஆண்டு அங்கீகரித்தபோதும் சுவீடன் 2014 ஆம் ஆண்டு அங்கீகரித்திருந்தது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் பல பாலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ளபோதும், கொலம்பியா ஒருபடி மேலே சென்று மேற்குக் கரையில் உள்ள ரமலா பகுதியில் தனது தூதரகம் ஒன்றை திறக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அந்த அங்கீகாரம் மற்றும் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் கடந்த வாரம் வெளியிட்டுள்ள இஸ்ரேலிய பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் உட்பட 3 ஹமாஸ் தலைவர்கள் மீதான தீர்ப்பு என்பன மேற்குலகம் மிகப்பெரும் அழுத்தம் ஒன்றிற்குள் இருப்பதையே காட்டுகின்றது. விரும்பியோ விரும்பாமலோ மேற்குலக கூட்டணியில் உள்ள நாடுகளை அவர்களின் முதலாளியான அமெரிக்காவையும் மீறி சில நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டத்திற்குள் தற்போதைய புதிய உலக ஒழுங்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ளது.

தற்போதைய நகர்வை நோர்வே தான் முன்னெடுத்துள்ளது. அது ஆச்சரியமானது அல்ல ஏனெனில் 1993 ஆம் ஆண்டு பாலஸ்தீனம் தொடர்பில் ஒஸ்லோ உடன்பாட்டை அதுவே முன்னெடுத்திருந்தது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் அந்த மக்களின் பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டிருந்தது. இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையில் அவர்களுக்கான அதிகாரத்தையும் நிறுவியிருந்தது. அந்த நகர்வு அன்றைய பூகோள அரசியல் சூழ்நிலைகள் கருதி எடுக்கப்பட்டிருந்தாலும், தற்போது மீண்டும் மாறிவரும் பூகோள அரசியல் சமநிலையை கருத்தில் கொண்டு அதனை எடுக்கவேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.



அதாவது காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் மற்றும் அங்கு ஏற்பட்டுவரும் மனிதப்பேரவலம் ஆகியவற்றை இந்த உலகம் நேரிடையாக பார்த்துக்கொண்டு நிற்கின்றது. மத்தியகிழக்கில் தெருச்சண்டியனாக வளர்த்துவிடப்பட்ட இஸ்ரேல் தற்போது அமெரிக்காவுக்கும், நேட்டோவிற்கும் பாரமாக மாறியுள்ளதாக கூறுகின்றது ஒரு மேற்குலக ஊடகம். இஸ்ரேலின் தற்போதைய போர் மத்திய கிழக்கு, ஆபிரிக்க மற்றும் மேற்கு ஆசிய நாடுகளில் அமெரிக்காவின் ஆளுமையை கடுமையாக பாதித்து வருகின்றது. எனவே தான் அமெரிக்காவின் அமைதி முகமான நோர்வே களத்தில் குதித்துள்ளது.

ஆனால் இந்த தடவை அவர்களால் ஏமாற்றுவது என்பது கடினமானது. அதனை தான் உக்ரைன் போரும், பாலஸ்தீனப்போரில் ஏழு மாதங்கள் கடந்தும் மேற்குலகத்தின் முழுமையான ஆதரவுகளுடன் ஹமாஸ் அமைப்பை அழிக்கவோ, அவர்களை சரணடைய வைக்கவோ இல்லையெனில் பாலஸ்தீன மக்களை அவர்களிடம் இருந்து பிரிக்கவோ இஸ்ரேலினால் முடியவில்லை என்ற நிகழ்வுகள் காட்டுகின்றன.

தனது மூன்று புதல்வர்களை ஒரே தாக்குதலில் இழந்தபோதும் ஹமாஸின் தலைவர்கள் தமது நிலையில் இறுக்கமாகவே உள்ளனர். 36,000 மக்கள் கொல்லப்பட்டு 80 விகிதத்திற்கு மேற்பட்ட வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு, உணவைக்கூட ஆயுதமாக பயன்படுத்தி பட்டினிச்சாவு வந்த போதும் அந்த மக்கள் தமது மண்ணைவிட்டு ஓட விரும்பவில்லை.



யாரும் ஹமாஸ் படையினர் செய்தது தவறு என்று அங்கு கூறவுமில்லை. தமது உரிமையையும், இறைமையையும் விட்டுக்கொடுக்காது நிற்கின்றனர். அந்த உறுதி தான் மேற்குலகத்தின் பல கூட்டணி நாடுகளை அசைத்துள்ளது.

இதனிடையே, தமிழீழத்தின் அங்கீகாரத்திலும் நோர்வேக்கு பங்குண்டா என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

1993 ஆம் ஆண்டு பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் வழங்கி பேச்சு மேடைக்கு அழைத்துச் சென்றது போலவே தமிழீழவிடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து, தமிழ் மக்களின் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு இரு நாடுகள் என்ற நிலையில் நோர்வே தனது பேச்சுக்கான முயற்சியை ஆரம்பித்திருந்தது.

அன்றைய பூகோள அரசியல் சூழ்நிலையில் இந்தியா என்ற பிராந்திய வல்லரசின் உள்நுழைவும், அமெரிக்காவின் அரசியல் காய்நகர்த்தல்களும் அன்று தமிழ் மக்களுக்கு பாதகமாக இருந்ததால் நாம் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளானோம். ஆனால் இன்று அந்த சூழ்நிலை மாறிவிட்டது.



அதனை இந்த வருடம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளில் ஓரளவு உணரக்கூடியதாக உள்ளது. தமிழ் மக்கள் சுயமாக முடிவெடுத்து இலங்கை அரசியலில் இருந்து ஒதுங்கப்போவதாக அவர்கள் உணரத்தலைப்பட்டுள்ளதும், இந்தோ-

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

# தமிழரசின் நழுவல் போக்கும் தமிழ்ப் பொது வேட்பாளரும்...



**ஜனாதிபதித் தேர்தலுக்கான தயாரிப்புக்களில் பிரதான அரசியல் கட்சிகள் இறக்கியுள்ள பின்னணியில் பொதுத் தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டும் என்ற அழுத்தங்களை பொதுஜன பெரமுன தீவிரப்படுத்தியிருக்கிறது. அதேவேளையில், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக் கட்சி எடுத்த நிலைப்பாடு, தமிழ்க் கட்சிகளிடையே ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இவை தொடர்பாக இந்த வாரம் பேசுகின்றார் கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர் களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

## பேராசிரியர் அமிர்தலிங்கம் செவ்வி

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொது ஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் தொடர்ச்சியாக ஜனாதிபதித் தேர்தலா பொதுத் தேர்தலா முதலில் நடத்தப்படும் என்ற ஒரு கேள்வி முன்வைக்கப்படுகின்றது. உங்களுடைய பார்வைலயில் எந்தத் தேர்தல் முதலில் நடைபெறும்?**

இப்போது ஒரு அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மை நாட்டு மக்களுக்குத் தேவைப் படுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெற்றால், ஒரு ஸ்திரத் தன்மை ஏற்படும். ஜனாதிபதியாக வரப்போபவரின் கட்சி அடுத் ததாக வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெறும். இது கடந்த கால வரலாறு. இப்போது மூன்று பிரதான வேட் பாளர்கள் களத்தில் உள்ளார்கள். அவர்களில் ஒருவர் நிச்சயமாக வெற்றி பெறுவார்.

அநுரகுமார ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், பாராளுமன்றத் தேர்தலில் அவர்கள் 113 ஆசனங்களைப் பெற வேண்டும். இல்லையெனில் அதில் ஒரு சிக்கல் உருவாகும். ஆனால், முதலில் பொதுத் தேர்தல் நடைபெற்றால் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாத நிலை உருவாகும்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றார். அவ்வாறு நடைபெற்றால், கணிசமான ஆசனங்களைத் தம் மால் கைப்பற்ற முடியும் என அவர் கணக்குப் பார்க்கின்றார். அதனால், அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதில் தாம் கணிசமான செல்வாக்கைச் செலுத்த முடியும் என அவர் எதிர்பார்க்கிறார்.

இவ்வாறு ஸ்திரமற்ற ஒரு அரசு அமையு மானால், கணிசமான அரசியல் மாற்றங்களைச் செய்ய முடியாது. ராஜபக்ஷக்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் எதனையும் முன்னெடுக்கவும் முடியாது. ஏனெனில் ஜனாதிபதி ராஜபக்ஷக்களின் ஆதரவில் தங்கியிருக்க வேண்டியவராக இருப்பார். அதற்கான முயற்சியைத்தான் பசில் ராஜபக்ஷ முன்னெடுக்கின்றார்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வைப் பொறுத்தவரையில், அவர் ஜனாதிபதித் தேர்தலைத்தான் விரும்புவார் என்று நான் நினைக்கின்றேன். பொதுத் தேர்தல் நடைபெற்றால், ஒது தொங்கு பாராளுமன்றம் அமைந்து குதிரை பேரங்கள் நடந்து சிக்கலான நிலை ஏற்படும். மீண்டும் ஒரு ஐந்தாண்டு காலத்துக்கு ஸ்திரத் தன்மை இல்லாமல் போகும் என்பதையும் அவர் அறிந்திருப்பார்.

இது அவருக்கு ஒரு இக்கட்டான நிலை. பொதுஜன பெரமுனவின் ஆதரவும் அவருக்குத் தேவை. ஆனால், இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டால், நாடு மீண்டும் ஒரு அரசியல், பொரு ளாதார நெருக்கடிக்குள் செல்லும் என்பதை அவர் நிச்சயமாக அறிந்திருப்பார். அதனால், முதலில் ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று அதன்பின்னர் பொதுத் தேர்தல் நடைபெற்றால், உறுதியான ஒரு அரசாங்கம் அமையும் என்பதுதான் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு.

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொறு வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கப் போவதாக தமிழ்க் கட்சிகள் சில முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. ஆனால், தமிழர சுக் கட்சி தமது தீர்மானம் எடுப்பதைப் பின்போட்டுள்ளது. இதனை எவ்வாறு பார்க் கின்றீர்கள்?**

தமிழ்ப் பொது வேட்பாளர் என்று சொல்லும் போதே அங்கு தெளிவான கொள்கை இருக்க வேண்டும். வெறுமனே வாக்களிப்பு முடிந்தவுடன் கலைந்து செல்வதாக அது இருக்கக்கூடாது. தேர்தலுக்குப் பின்னர் தாம் என்ன செய்வோம் என்பதை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.



பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்ட கட்சி என்ற வகையில் தமிழரசுக் கட்சி இன்றைய நிலையில் முன்னிலை வகிக்கின்றது. அதனால், அவர்கள்தான் தமிழ் மக்களின் சார்பாக அரசாங்கத்துடன் பேசப் போகின்றார்கள். அதாவது புதிய ஜனாதிபதியுடன் பேசப்போகின்றார்கள். அதனால், அவர்களுடைய நிலைப்பாடு முக்கிய மானது. அதேவேளையில், வரப்போகும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைவிட மற்றொரு கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றால், அவர்கள் ஜனாதிபதியுடன் பேச வேண்டியிருக்கும்.

இன்றைய நிலையில் தமிழரசுக் கட்சிதான் முக்கிய பாத்திரம் வகிக்கின்றது. அதனால், அவர்களுடைய நிலைப்பாடு முக்கியமானது. ஆனால், தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் பொது வேட்பாளருக்கு எதிரான கருத்தையும், சிறிதரன் ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்ததையும் பார்க்க முடிந்தது. இரண்டு முக்கிய தலைவர்கள் இந்த விடயத்தில் பிளவுபடுவது தமிழரசுக் கட்சியின் கட்சி ரீதியான முடிவைப் பாதித்திருக்கின்றது. அவர்கள் முடிவை ஒத்திவைத்திருப்பது அதன் வெளிப்பாடுதான். அதாவது, தமிழரசுக் கட்சி உறுதியான ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாத ஒரு நிலையில் இருக்கின்றது.

தமிழரசுக் கட்சிக்குள் இருக்கின்ற பிரச்சி னையை அவர்கள் முதலில் தீர்க்க வேண்டும். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு தலைவர் வரவேண்டும். இப்போதுள்ள குழப்ப நிலை, நீதிமன்றத் தீர்ப்புக்காக காத்திருத்தல் என்பன தொடர்ந்தால் தமிழரசுக் கட்சியால் ஒரு மித்த ஒரு முடிவை எடுக்க முடியாது.

பொது வேட்பாளர் என்ற விடயத்தைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியின் நிலைப் பாடு மிகவும் முக்கியமானது. தமிழரசுக் கட்சி இந்த பொது வேட்பாளர் என்ற விடயத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால், மற்றைய கட்சிகள் இணைந்து எடுக்கும் முடிவு வெற்றிபெறும் என்று நான் நினைக்கவில்லை. அதனால், தமிழரசுக் கட்சியின் முடிவு இந்த விடயத்தில் முக்கியமானது.

காலந்தாழ்த்துவது ஒருவகையில் தந்திரோ பாயமான அணுகுமுறையாகவும் இருக்கலாம். அல்லது, அவர்களுடைய கட்சிக்குள் உருவாகி யிருக்கும் பிரச்சினைகளை முதலில் தீர்த்துவிட்டு அடுத்த கட்டத்தில் இதனையிட்டு ஆராயலாம் எனவும் அவர்கள் திட்டமிட்டிருக்கலாம்.

• • •

# தமிழர்களின் வரலாற்றுப்பொக்கிசமான யாழ் நூலக படுகொலைகள் !

## 44ஆவது நினைவு நாள் -01.06.2024

**பாகம் 1**

“எனது கண்களையே நம்ப முடிய வில்லை. அந்த விசாலமான மண்டபத்தின் தரை முழுவதுமே சாந்தும் சாம்பலுமேயன்றி வேறெதுவுமே காணப்படவில்லை. ஓர் இடு காட்டின் மத்தியில் நிற்பது போன்ற உணர்ச்சியே எனக்குள் மேலிட்டது. எமக்கு ஏன் இந்தக் கொடுமையைச் செய்தார்கள்? கலங்கிய கண்களோடு எரிக்கப்பட்ட நூலகத்தின் முன்பாக நின்ற யாழ். பொது நூலகர் திருமதி ரூபவதி நடராஜா விடுத்த உருக்கமான கேள்வி இது. நாட்டின் அனைத்துத் திசைகளில் இருந்தும் ஏன் உலக நாடுகள் எங்குமிருந்தும் வாழும் மக்களிடம் இருந்தும் எழும் கேள்வியாகவும் இது இருந்தது.




அமைச்சர் காமினி திசநாயக்காவும்,ஜே.ஆரும்

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரான காமினி திசநாயக்கா மற்றும் சிங்கள இனவாதி என்று பெயர்பெற்ற சிறில் மத்தியூ ஆகியோரின் தலைமையில் தென்னிலங்கையில் இருந்து அழைத்துவரப்பட்ட சிங்களக் குண்டர்களும்,பொலிசாரும் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியன்று மூட்டப்பட்ட தீயினால் ஆசியாவின் மிகப்பெரிய நூலகமான யாழ்ப்பாண பொதுநூலகம் எரிக்கப்பட்டது.அன்றைய தினம், மதுபோதையில் நின்ற பொலிசாரும்,காடையர்களும் நூலகத்திற்குள் நுழைந்து, அங்கிருந்த காவலாளியைத் தாக்கித் துரத்தியடித்துவிட்டு நூலகப் பெருங்கதவை உடைத்து உள்ளே புகுந்து அட்டூழியங்கள் புரிந்தனர்.



அமைச்சர் சிறில் மத்தியுவும் ஜே.ஆரும்

அமைச்சர் காமினி திசநாயக்காவும்,ஜே. ஆரும் அமைச்சர் சிறில் மத்தியுவும் ஜே.ஆரும் தெற்காசியாவில் மிகப் பெரும் நூலகமாக கருதப்படும் யாழ் நூல கத்தில் சுமார் 97ஆயிரம் அரிய புத்தகங்கள், பல நூற்றாண்டுகள் பழமைகொண்ட ஓலைச்சுவடிகள், ஈழத்தின் பண்டைய நூல்கள், பல அரிய தமிழ் நூல்கள்,ஆரம்ப காலத்தில் இருந்து வெளிவந்த ஈழத் தமிழ்ப் பத்திரிகைகளின் மூலப் பிரதிகள்,கையெழுத்துப்பிரதிகள்,ஓலைச்சுவடிகள், சங்கிலியன்கால மருத்துவ நூல்கள், வாகடங்கள் என விலைமதிப்பற்ற நூல்களும் பல்வேறு வகைப்பட்ட ஆவணங்களும்,பண்டைய பொருட்களும் பெற்றோல்,கழிவு எண்ணெய்களை ஊற்றித் தீமூட்டி எரித்தழித்தனர். நூலகத்தினுள் சாம்பல் குவியல்களே எஞ்சிக்கிடந்தன. அந்தச் சாம்பல் குவியல்களுக்குள்ளே எரியாத நூல்கள் என்று எதுவுமே இல்லாத அளவுக்கு எல்லாமே சாம்பராக்கப்பட்டன. யாழ்ப்பாண மாநகரசபை வளாகத்தில் உள்ள தீயணைப்பு இயந்திரங்களை அருகில் உள்ள நூலகத்திற்குக் கொண்டு செல்ல முடியாதவாறு பொலிசாரினால் ஆயுத முனையில் தடுக்கப்பட்டது.அது முற்றாகவே எரியும் வரை பொலிசார் வேடிக்கை பாரத்துக் கொண்டிருந்தனர்



வல்வை: ந.அனந்தராஜ்

நூலகம் எரிந்து கொண்டிருந்த சுவாலை யாழ்ப்பாண நகரமெங்கும் செந்தணலாக மாறிப் பின்னர் கரும் புகையைக் கக்கிக்கொண்டிருந்தது. யாழ்ப்பாண நூலகம் எரிந்து கொண்டிருப்பதை யாழ் ஆயர் இல்லத்தின் இரண்டாவது மாடியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த பேரறிஞரும்,“ஒப்பியல் இலக்கணம்” என்ற அரிய தமிழ் .இலக்கண ஆராய்ச்சி நூலை எமக்கு ஆக்கித் தந்தவரும்,பன்மொழிஆராய்ச்சியாளருமான அருட்தந்தை தாவீது அடிகளார் மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார்.அந்த அறிஞர் மாரடைப்பால் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என்ற செய்தி தமிழ் உலகத்திற்கு விழுந்த அடுத்த மிகப்பெரும் அடியாகவே இருந்தது.



1981ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த பொது நூலகம்

யாழ் நூலகம் எரிக்கப்பட்டதைக்கண்டு கொதித்தெழுந்தயாழ்பல்கலைக்கழகமாணவர்கள் கையில் டைனமைற் வெடியுடன் பல்கலைக்கழக நூலகத்தை காப்பாற்றத் திரிந்தனர்.

1981ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த பொது நூலகம் 1981இல் பொலிசாரினால் எரிக்கப்பட்ட பினனர் பொது நூலகம் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட இந்த வன்முறையின்போது,ஐக்கிய தேசியக் கட்சி யின் அமைச்சர் காமினி திசநாயக்காவின் தலைமையிலான கும்பல்களினால்,யாழ்ப்பாண பொதுநூலகம் எரிக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஈழநாடு செய்தித்தாளின் அலுவலகம் எரிக்கப்பட்டு அங்கிருந்த பழைய பிரதிகள். ஆவணங்கள் எல்லாமே அழிக்கப்பட்டன, தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகம், புதிய சந்தைக் கட்டடத் தொகுதிகள் மற்றும் தமிழ்அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான யோகேஸ்வரனின் வேம்படிச்சந்தியில் அமைந்துள்ள வீடு, திரைஅரங்கம். வங்கிகள் என்பனவும் எரிக்கப்பட்டன. இந்த வன்முறைகள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களால் ஏற்கனவே நன்கு திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது. என்பது புலனா கியது.



1981இல் பொலிசாரினால் எரிக்கப்பட்டபினனர் பொது நூலகம்

அதேவேளை 1974ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டின்நினைவாக யாழ் நகரப் பகுதிகளில் அமைக்கப்பட்ட தமிழ் பண்பாட்டுச் சின்னங்களான ஔவையார் சிலை, திருவள்ளுவர் சிலை, பாரதியார்சிலை, மகாத்மா காந்தி சிலை போன்றவையும் காடையர்களினால் உடைக்கப்பட்டதுடன் முற்றவெளியில் தமிழாராய்ச்சி மாநாட்டின்பொழுது இறுதி நாளான ஜனவரி 10 ஆம் திகதி பொலிசாரினால் கொல்லப்பட்ட 9 தமிழ் இளைஞர்களின் நினைவாகக் கட்டப்பட்ட நினைவாலயமும் இடித் தழிக்கப்பட்டன.




யாழ்ப்பாண நூலகம் எரிக்கப் பட்டபின்னர், இலங்கையின் புகழ் பெற்ற நூலகராக இருந்த எஸ். எம்.கமாலுதீன் அவர்கள் 19.7.1981 திகதி வெளியான வீரகேசரி வார வெளியீட்டிலே “உலகின் தலை சிறந்த நூலகங்களில் ஒன்றான யாழ்ப்பாண நூலக எரிப்பானது அதி உச்ச காட்டுமிராண்டித் தனமான செயல்” என்று குறிப்பிட்டு எழுதிய வாசகம் உலக மக்களால் மறக்கப்படமுடியாத ஒரு காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையாகவே இன்றும் பேசப் படுகின்றது.

அதேபோன்று,நீலவண்ணன் எழுதி வரதர் வெளியீடாக 1981 ஜூனில் பிரசுரமான “மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது” என்ற நூல் “யாழ் நூலகப்படுகொலை” பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: “அன்று இரவு 10 மணியளவில், நூலகத்திற்குள் நுழைந்த கொடியவர்கள் காவலாளியைத் துரத்தியடித்துவிட்டு நூலகப்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# அனைத்துலக இராஜதந்திர நடவடிக்கைகளுக்கான பொது அமைப்பு அவசியமாகின்றது

மட்டு.நகரான்

கிழக்கு மாகாணம் என்பது தென் தமிழீழம் என்ற மிகமுக்கியத்துவம்வாய்ந்த ஒரு பகுதியாக தமிழர்களினால் நோக்கப்படுகின்றது.கிழக்கு வடக்குடன் இல்லை கிழக்கு தனித்துவமானது என்பது காட்டுவதற்கான முயற்சிகள் இன்று சிங்கள பேரினவாத சக்திகளினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.



கிழக்கு மாகாணத்தினை கூறுபோட்டு தமிழர்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இதனை தடுப்பதற்கான எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையே இருந்துவருகின்றது.

இன்று வடகிழக்கில் இலங்கையின் ஜனாதிபதி தேர்தலுக்காக பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்காக பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை காணமுடிகின்றது.

குறிப்பாக வடகிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் தமிழ் தேசிய சக்திகளும் தமிழ் தேசியம் சார்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் மும்முரமாக செயற்பட்டுவருகின்றனர்.இவர்கள் இந்த விடயத்தில் காட்டும் மும்முரத்தினை கிழக்கில் தமிழர்களின் நெருக்கடிகளில் காட்டுவதில்லை என்ற கவலை கிழக்கில் தமிழர்களுக்கு இருக்கின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் தமிழர்களின் இருப்பு தொடர்பில் நாங்கள் தொடர்ச்சியாக எழுதிவருகின்றோம்.



சிலர் நினைக்கலாம் ஒரே விடயத்தினை மீண்டும் மீண்டும் எழுதுவதனால் என்ன பயன் என்று.ஒரு விடயம் மீண்டும் மீண்டும் பேசப்படும்போதே அதற்கான தீர்வுக்கான முன்னெடுப்புகள் முன்னெடுக்கப்படும் என்பதை நான் நம்புகின்றேன்.ஒரு பிரச்சினை தீர்க்கப்படுமானால் அல்லது ஒரு பிரச்சினை குறித்து பேசப்படுமானால் நாங்கள் அது தொடர்பில் தொடர்ந்து எழுதவேண்டிய தேவையிருக்காது.

ஆனால் கிழக்கில் பல பிரச்சினைகள் எழுகின்றபோதும் அது தொடர்பில் பேசுவதற்கு பின்னடிக்கும் நிலைமைகள் என்பது கிழக்கில் தமிழர்களின் இருப்பினை கேள்விக்குட்படுத்தும் என்பதே எனது நிலைப்பாடாகவுள்ளது.

இன்று மயிலத்தமடு கால்நடை பண்ணையாளர்கள் 230 நாளையும் தாண்டி தமது நிலத்தினை மீட்பதற்காக தொடர்ந்து போராடிவரும் நிலையில் அது தொடர்பில் இன்று பேசும் நிலைமையினை காணமுடியாத நிலையே காணப்படுகின்றது.இதுஒரு ஆபத்தான விடயமாகவே காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நெடுகல் மலை பகுதியில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜெகம்பத் தலைமையில் அடிக்கல் நடப்பட்டுள்ளது.நெடுகல்மலை கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வடமுனை பகுதியில் இந்த நெடுகல்மலை பகுதி காணப்படுகின்றது.

இந்த பகுதி தமிழர்களின் பாரம்பரிய பகுதியாகும்.இங்கு தொல்பொருள் பகுதியாக கடந்த காலத்தில் அடையாளப்படுத்தப்பட்டு அப்பகுதியில் தமிழர்கள் செல்லமுடியாத நிலையேற்படுத்தப்பட்டிருந்த நிலையில் இன்று அங்கு விகாரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நெடுகல்மலை பகுதியை சூழ தமிழர்கள் வாழ்ந்துவரும் நிலையில் அப்பகுதியில் தற்காலிகமாக இராணுவமுகாம் அமைக்கப்பட்டு அந்த இராணுவத்தின் உதவியுடன் இந்த விகாரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



ஏற்கனவே புனாணை பகுதியில் நூறு வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியில் அதுவும் புனாணை பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் இருந்த இராணுவமுகாமில் இராணுவத்தின் வழிபாட்டிற்காக விகாரையொன்று அமைக்கப்பட்டு இன்று அந்த விகாரையில் பௌத்த பிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டு இன்று அது ஒரு பௌத்த விகாரையாக செயற்பட்டுவருவதுடன் அப்பகுதியில் சிங்களவர்களை குடியேற்றும் செயற்பாடுகளும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பில் கிழக்கில் இதுவரையில் யாரும்பேசியதாக தெரியவில்லை.தமிழ் தேசியம் சார்ந்து செயற்படுவோரும் இது தொடர்பில் பேசியதாகயில்லை.தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த சுரேஸ் மட்டும் இது தொடர்பான தகவல்களை அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன் அவரது கடமை முடிந்ததுபோன்று செயற்படும் நிலைமையே காணப்படுகின்றது.

தையிட்டியில் விகாரை அமைத்துமுடிந்த பின்னர் எதிர்ப்பு போராட்டங்களை வெறும் கண்துடைப்புக்காக நடாத்துவதுபோன்று தமிழ் தேசிய கட்சிகள் செயற்படும் நிலைமையே கிழக்கிலும் காணப்படுகின்றது.இந்த நிலைமையானது கிழக்கு தமிழர்களின் இருப்பினை முற்றுமுழுதாக கேள்விக்குட்படுத்தும் வகையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன.



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியினை சூழ்ந்த வகையில் திட்டமிட்ட குடியேற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. ஒரு புறம் மயிலத்தமடு, மாதவனையில் மறுபுறம் நெடுகல்மலை, புனானை என தொடர்ச்சியாக இந்த அத்துமீறிய குடியேற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அது தொடர்பில் நடவடிக்கையெடுக்கவோ பேசவோ யாரும் இல்லாத சூழ்நிலையே காணப்படுகின்றது. மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பகுதியில் தொடர்ச்சியாக அத்துமீறல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

காணிகள் அடைக்கப்பட்டு கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டுசெல்லமுடியாத சூழ்நிலையேற்படுத்தப்பட்டுள்ளது. சிங்கள அத்துமீறிய குடியேற்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் நிலையிலும் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக போராடிவரும் சூழ்நிலையே காணப்படுகின்றது. ஆனால் இன்று பண்ணையாளர்கள் தனியாக நின்றே போராடவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கடந்த காலத்தில் பண்ணையாளர்களுடன் நின்று போராட்டங்களை நடாத்திய தமிழ் தேசிய அரசியல்கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் இன்று அவர்களின் போராட்டத்தினை கருத்தில்கொள்ளாத நிலையே காணப்படுகின்றது.



வடகிழக்கு மாகாணத்தில் அவர்களின் போராட்டத்திற்கான குரல்கள் ஓய்ந்த நிலையில் தனிமையில் நின்று போராடிவருகின்றனர். அவர்களின் காணிகளில் தொடர்ச்சியாக அத்துமீறல்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையிலும் தமது உரிமைக்காக போராடிவருகின்றனர்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# தமிழர்களின் பெருந்தன்மையை சிங்களவர்களும் கற்றுக்கொள்ள வேண்டும்

ஹஸ்பர் ஏ ஹலீம்

வெசாக் தினத்தை முன்னிட்டு நாட்டின் வடகிழக்கு பகுதிகள் உட்பட பல இடங்களில் தன்சல் வழங்கும் நிகழ்வு இடம் பெற்று வருகின்றது. அரசாங்க திணைக் களங்கள்,தனியார் நிறுவனங்கள் உட்பட பொலிஸார்,இராணுவத்தினர் என பலர் இதனை செய்து வருகின்றார்கள்.



இதில் பல சமூகங்களை சேர்ந்தவர்களும் தன்சலை பெறுகின்றார்கள் இருந்த போதிலும் இதன் மூலம் சமூக நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. இந்த வெசாக் தினத்தை பௌத்த மக்கள் மே மாதம் 23ம் திகதி அனுஷ்டிக்கின்றனர். இந்த வெசாக் பௌர்ணமி போயா தினமானது புத்தரின் பிறப்பு, ஞானமடைதல், இறப்பு ஆகியவற்றை குறிக்கும் ஒரு தினமாக காணப்படுகிறது.

இது இலங்கையில் மாத்திரமல்ல இந்தியா,சீனா,மியன்மார், கம்போடியா, சிங்கப்பூர்,தாய்வான், தென்கொரியா,நேபாளம் உள்ளிட்ட பல நாடுகளில் இதனை கொண்டாடுகின்றனர்.

இலங்கையின் வட கிழக்கு பகுதியில் வாழும் சிறுபான்மை சமூகமும் பெரும்பான்மை மக்களுக்காக பூரண ஒத்துழைப்புக்களுடன் வெசாக் தினத்துக்காக ஒத்துழைக்கின்றனர் .சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் பெரும்பான்மை சமூகம் தன்சலை வீதியோரங்களில் வழங்கி வருகின்றனர். இது போன்ற சில நிகழ்வுகள் சிறுபான்மை மக்களுக்காக நடாத்தப்படுகின்ற போது பல்வேறு இன்னல்களை தமிழ் பேசும் மக்கள் அனுபவித்துள்ளார்கள் அனுபவித்தும் வருகிறார்கள்.

நாட்டின் சட்ட திட்டங்கள் எல்லோருக்கும் பொதுவானது என்ற நிலையில் இருந்தால் அவர்கள் உரிமைகளோடும் சுதந்திரத்தோடும் வாழ அரசாங்கம் அம்மக்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் அப்போது தான் இன நல்லிணக்கம் சமூக ஒற்றுமை என்பன ஏற்படும்.

இந்த வருடத்துக்கான வெசாக் உற்சவ கருப்பொருளாக “ மற்றவர்கள் என்ன செய்தார்கள் என்பதை பாராமல் நாம் என்ன செய்தோம்” என்பதாக காணப்படுகிறது.

நாட்டின் பொருளாதார நிலை மோசமடைந்த நிலையில் காணப்பட்டாலும் கடந்த கால நெருக்கடியை விடவும் இம் முறை வெசாக் தினம் களை கட்டியுள்ளது.

மக்கள் ஆர்வத்துடன் பெரும்பான்மை சமூகத்தின் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அன்னதானங்களை பெறுகின்றனர். வீதியோரங்கள் அனைத்தும் வெசாக் தோரணைகள் மூலமாக அலங்கரிக்கப்பட்டு தமிழ் பேசும் மக்களின் மூலமாக அவர்களும் இணைந்து தன்சலை உற்சாகமாக பெறுகின்றனர்.

அவர்களுடைய மதக் கலாசாரத்தை மதித்து நடக்கின்றனர் இதன் மூலம் தமிழ் முஸ்லிம் சிங்களம் என்ற பிரிவினையற்ற இன ஐக்கியம் ஏற்படுகின்றது இது தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்பதை மக்கள் விரும்புகின்றனர். பாதுகாப்புக்கு மத்தியில் விகாரைகளில் தன்சல் நிகழ்வுகள் மத போதனைகளை நடாத்துகின்றனர் இது போன்ற சுதந்திரமாக சிறுபான்மை மக்களும் அவர்களுடைய சடங்குகளை நடாத்த சந்தர்ப்பமும் ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும் நீதிமன்ற தடை என்ற பேரில் தடை உத்தரவு வழங்கப்பட்டு பொலிஸாரால் இடைநிறுத்துவதும் உள வளத்தை பாதிக்க கூடிய வகையில் இன்றி நிம்மதியாக வாழ வழியமைக்க வேண்டும் அப்போது தான் நாட்டில் முப்பது வருட கால யுத்தத்தின் பின்னர் மக்கள் மனங்களில் நிலைத்திருக்க கூடிய ஒற்றுமை ஏற்படும்.



வெசாக் தினத்தில் மாத்திரம் ஒற்றுமையை எதிர்பார்த்து விடாது தொடர்ந்தும் புத்தர் கூறும் நல்ல பல வார்த்தைகள் ஊடாக மக்களை ஒற்றுமையாக வாழக்கூடிய விடயங்களை கைப்பிடிக்க வேண்டும். வட கிழக்கு மக்கள் பல உறவுகளை இழந்து கண்ணீர் வடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது இவர்களுக்கான நீதி நியாயங்கள் கிடைக்க வேண்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று தேவை இப்படியான அப்பாவி மக்களுக்கான நீதியை இந்த நேரத்தில் அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே வட கிழக்கு சிறுபான்மை தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

• • •

## மட்டக்களப்பில்... தொடர்ச்சி ...

இவர்களது நோக்க மாக இருக்கின்றதே தவிர மட்டக் களப்பு மாவட்ட மக்களை பாதுகாக்க எந்தவொரு முன்னேற்றகரவமான செயற்பாடுகளையும் செய்யவில்லை.

குறிப்பாக மேச்சல்தரை பகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் போக முடியாத சூழ்நிலை காணப்பட்டது அதனை எமது கட்சி தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அந்த இடத்துக்கு சென்று அந்த பகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினர் கூட செல்லமுடியாது என்பதை சர்வதேசத்துக்கு அம்பலப்படுயிருந்தார்.

இந்த நிலையில் கஜேந்திரகுமார் ஏன் இங்கு வரவேண்டும் என பிள்ளையான் நேற்ரு முன்தினம் கூட்டத்தில் கேட்டிருந்தார். எனவே கஜேந்திரகுமார் இந்த இடத்துக்கு வரவேண்டியதாக இருந்தது. நீங்கள் ஒரு காட்டிக் கொடுப்பை செய்து தமிழ் மக்களை அழிக்கின்ற செயற்பாட்டில் நின்றதனால் அந்த மக்கள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளை கூப்பிடவேண்டிய அபாய நிலைக்கு இட்டுச் சென்றீர்கள் எனவே அது ஒரு வெக்க கேடான விடயம். இவரின் செயற்பாடுகளை பார்த்தால் தெரியும் தங்களது பக்கற்றுக்களை நிரப்புகின்ற விதமாக தங்களின் அமைச்சுக்கு ஊடாககிடைக்கின்ற வீதிகளை அமைத்து அதில் 15 வீதம் தரகு பணம் பெற்றுக் கொண்டு அதற்கு வக்காளத்து வாங்குகின்ற ஒப்பந்தகாரர்களை பின்னால் வைத்துக்கொண்டு பேச ஒப்பந்தகாரர்கள் கையடிக்கின்ற செயற்பாட்டை மிகக் கச்சிதமாக பிள்ளையான் செய்து வருகின்றார் என்றும் சுரேஷ் தெரிவித்தார்.

## பாலஸ்தீனத்தைப் ... தொடர்ச்சி ...

பசுபிக் பிராந்தியத்தில் எற்பட்டுள்ள நெருக்கடியும் அதற்கு காரணமாகலாம். எனினும் நாம் எதுவுமே செய்யாமல் விழாக்களையும், நினைவு நிகழ்வுகளையும் மட்டும் கொண்டாடிக்கொண்டு இருப்பதால் எதுவும் நடந்துவிடாது.

2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான காலத்தில் எம்மை ஒரு தேசமாக மதித்து தமிழீழ காவல்துறைக்கு பயிற்சி கொடுத்த அயர்லாந்து கடந்த வாரம் பாலஸ்தீனத்தை அங்கீகரித்த நாடுகளில் ஒன்று. சமாதான காலத்தில் தமிழீழத்தை ஒரு நாடாக கருதி வர்த்தக உடன்பாடு தொடர்பில் அன்றைய தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தது சீனா.

தமிழீழ நடைமுறை அரசு இருந்த காலத்தில் தென்னாபிரிக்கா, எரித்திரியா என்று பல நாடுகளுடன் எமக்கான தொடர்புகள் பலமாகவே இருந்தன. ஆனால் அவை அனைத்தும் ஒருசில நாடுகளில் உள்ள அமைப்புக்களின் தன்னலப் போக்குகளினால் இன்று இழக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தை அங்கீகரித்த 143 நாடுகளைப் போல எமக்கான ஆதரவுகளைத்தேடும் இராஜதந்திர நகர்வுகளை நாம் மேலும் விரிவுபடுத்த வேண்டும். ஒரு சில நாடுகள் கொண்டுவரும் தீர்மானங்கள், சில நாடுகளின் தலைவர்களும், அரசியல்வாதிகளும் வெளியிடும் அறிக்கைகளுக்கு மயங்கி எமது பயணத்தை நிறுத்தாது தொடரும் மனப்பக்குவமும் உறுதியும் வேண்டும்.

அறிக்கைகள், தீர்மானங்கள், ஆசை வார்த்தைகள் எமக்கு முன்னால் முன்வைக்கப்படும் ஆனால் அவை தான் எமக்கான தீர்வு அவர்கள் தான் எமக்கான தீர்வை வழங்கப்போகின்றார்கள் என நம்புவோமாக இருந்தால் அல்லது அது தொடர்பில் மக்களை நம்ப வைப்போமாக இருந்தால் மீண்டும் 15 வருடங்கள் இலகுவாக கடந்து சென்றுவிடும்.

• • •

## குஜாராத்தில் ... தொடர்ச்சி ...

அடிப்படைவாதம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும். இல்லையேல் இலங்கையிலும் எதிர்காலத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை போன்ற அடிப்படைத் தாக்குதல்கள் நடத்தப்படுவதனை தடுக்க முடியாது” என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் தயங்குவதற்கு உள்நாட்டு அரசியல் காரணங்கள் உள்ளன. அதுபோலவே சர்வதேச காரணங்களும் உள்ளன. ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அதனை ஆராய்ந்த ஆணைக்குழுவினால் இந்தப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது இஸ்லாமிய அடிப்படைவாதம் வளர்ச்சியடைவற்கு காரணமாக இருக்கிறதா என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரும் அந்தக் கோட்பாடுகளும் உயிர்ப்புடன் இருப்பதை உறுதிப்படுத்துகின்றது. அதற்கு மேலாக – இந்தியாவில் உள்ள ஒரு பிரிவினரும், பாகிஸ்தான் தொடர்பும் இதன் பின்னணியில் இருப்பதையும் விசாரணைகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்விடயத்தை இப்படியே போட்டுவிட முடியாது. இதன் பின்னணி நோக்கங்கள் என்பன வெளிக்கொண்டுவருவதன் மூலமாகவே எதிர்காலத்தில் தாக்குதல்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியும்!

• • •

# முன்னோக்கிய நகர்வு

துரைசாமி நடராஜா

இந்திய வம்சாவளி மக்கள் இந்நாட்டின் முதுகெலும்பைப் போன்றவர்கள். நாட்டின் எழுச்சியில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். இதனை கருத்தில் கொண்டு அம்மக்களின் எழுச்சி கருதி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாகவே வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றது. இந்தவகையில் அம்மக்களை தேசிய நீரோட்டத்தில் உள்ளீர்ப்பதோடு தனித்தேசிய இனமாக அங்கீகரிக்கவும் வேண்டும் என்ற வலியுறுத்தல்களும் இருந்து வருகின்றன. இதனிடையே இந்திய வம்சாவளியினரின் இலங்கை வருகையை ஆவணப்படுத்துவதற்கு இந்தியா உதவ வேண்டும் என்று 'கோபியோ' அமைப்பின் தலைவர் குமார் நடேசன் அண்மையில் இந்தியாவை வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



தமிழக வரலாற்றில் 19 ம் நூற்றாண்டு மிகவும் முக்கியத்துவம் மிக்க ஒரு ஆண்டாக விளங்குகின்றது. இந்நூற்றாண்டில் இலட்சக்கணக்கான தமிழ்த் தொழிலாளர்கள் தமிழகத்திற்கு மிக அண்மையிலுள்ள இலங்கையில் மட்டுமன்றி நூற்றுக்கணக்கான மற்றும் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கும், தீவுகளுக்கும் அழைத்துச் சென்று குடியேற்றப்பட்டனர். இவற்றுள் நேவிஸ், அன்ரீல்ஸ், நியூ கலிடோனியா, கிரனிடா, பிஜி, டெமாரா, தென்னாபிக்கா, வியட்நாம், அந்தமான், சிங்கப்பூர், மலேசியா போன்ற பல இடங்கள் உள்ளடக்குகின்றன.



இந்நாடுகளிலும், தீவுகளிலும் அம்மக்கள் அனுபவித்த கொடுமைகள் சொல்லிலடங்காது. அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டு முதலில் பிரித்தானிய, பிரான்சிய ஆட்சியாளர்களாலும், பின்பு சுதேச ஆட்சியாளர்களாலும், அந்தந்த நாடுகளையும் தீவுகளையும் சேர்ந்த சுதேச இனத்தவர்களாலும், தொழிலாளர்களல்லாத ஏனைய தமிழர்களாலும்,ஏனைய இந்தியர்களாலும் வணிகர்கள், அதிகாரிகள், தோட்ட உத்தியோகத்தர்கள் பிற அலுவலர்கள் போன்றவர்களாலும் மிகவும் கொடுமையான சுரண்டல்களுக்கு இம்மக்கள் உள்ளானதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வகையில் மலேசியாவில் குடியேற்றப்பட்ட தொழிலாளர்கள் அனுபவித்த கொடுமைகள் தொடர்பில், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் வரலாற்று விரிவுரையாளராகத் திகழ்ந்த, மறைந்த சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் பதிப்பித்த 'உலகம் பலவிதம் ' என்ற நூலில் பல விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மலேசியாவிலுள்ள தோட்டங்களில் வேலை செய்யும் இந்திய தொழிலாளர்களை அத்தோட்டங்களின் முதலாளிகளாகிய ஐரோப்பியர் மிருகத்தனமாக வழிநடத்தினர். கர்ப்பிணித் தாய்மார்களிடம் கருணைகாட்டாது அவர்களிடம் கொடூரமாக வேலை வாங்கினர். தொழிலாளர்களின் நோய் நொடிகளை கருத்தில் கொள்ளாது உச்சகட்ட உழைப்பினை அவர்களிடமிருந்து பெற முயன்றனர். கூலிப் பெண்களை தமது காமப்பசிக்கு ஐரோப்பிய முதலாளிமார் இரையாக்கினர். கூலிப்பெண்கள் இவர்களுடைய நீதியற்ற கேள்விக்கு இணக்கம் தெரிவிக்காதவிடத்து அப்பெண்களுக்கு கஷ்டமான வேலையை செய்யும்படி கட்டளையிடுவார்கள். அத்துடன் நையப்புடைப்பதும், வேலையில் இருந்து விலக்கிவிடுவதும் கூட வழக்கமாக இருந்தது.

### அந்நியராகக் கருதினர்

19 ம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்து இடம்பெயர்ந்து இலங்கையில் குடியேறிய இந்திய வம்சாவளி மக்களும் பல்வேறு நெருக்கீடுகளையும் சவால்களையும் சந்திக்க நேர்ந்தமை புதிய விடயமல்ல.



இம்மக்கள் நாட்டில் வாழ்ந்த ஏனைய சமூகத்தினரின் அலட்சியத்திற்கு உள்ளாகி இருந்தனர். கூலிகள், கள்ளத்தோணிகள், வடக்கத்தையார், தோட்டக்காட்டான், இந்தியக்காரர் என்றெல்லாம் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டனர். இம்சிக்கப்பட்டனர் என்கிறார் கலாநிதி க.அருணாசலம். 20ம் நூற்றாண்டில் நகர்ப்புறங்களில் எழுந்த தொழிற்சங்க இயக்கம் நகர தொழிலாளர்களையும், தோட்டத் தொழிலாளர்களையும் கூட்டாக இயக்கும் முயற்சிகளிலோ அல்லது பெருந்தோட்டப் பகுதிகளுக்கு இயக்கத்தை விரிவு செய்யும் நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை.

1930 இல் இந்தியத் தொழிலாளர்கள் இந்நாட்டில் நிரந்தரமாக வேரூன்றியபோதிலும் நகர்ப்புறத்தில் வளர்ச்சியுற்ற தொழிற்சங்கங்களின் தலைவர்கள் அவர்களை அந்நியர்களாகவே கருதினர். கொழும்பு போன்ற நகர்ப்புறங்களில் வேலைநிறுத்தங்கள் இடம்பெற்றபோது தோட்ட உரிமையாளர்கள் தமது தொழிலாளர்கள் நகரங்களுடன் தொடர்பு கொள்ளாதவாறு தடை செய்தனர். 1920களில் நகரத்தொழிலாளர் மத்தியில் குழப்பநிலை காணப்பட்டபோது தோட்டத் தொழிலாளர்களுக்கென்று போராடுவதற்கு தொழிற்சங்கங்களோ அல்லது வேறு பொதுநல சங்கங்களோ உருவாகியிருக்கவில்லை என்பது புத்திஜீவிகளின் கருத்தாகும்.

இந்திய வம்சாவளி மக்கள் இந்நாட்டின் சனத்தொகையில் ஒரு காலத்தில் கணிசமான ஆதிக்கத்தினை செலுத்தி இருந்தனர். இதனடிப்படையில் 1911 இல் நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.9 வீதமாகவும், 1921 இல் 13.4 வீதமாகவும் இம்மக்கள் காணப்பட்டனர். 1931 இல் 15.4, 1946 இல் 11.7, 1953 இல் 12.0, 1963 இல் 10.6, 1971 இல் 9.3 என்ற வீதத்தில் இந்திய வம்சாவளி மக்களின் தொகை அமைந்திருந்தது. எனினும் இம்மக்களின் எண்ணிக்கையில் படிப்படியாக வீழ்ச்சி நிலை மேலோங்கியது. இதற்கேற்ப 1981 இல் நாட்டின் மொத்த சனத்தொகையில் 5.5 வீதமாகவும், 2012 இல் 4.1 வீதமாகவும் இம்மக்களின் எண்ணிக்கை காணப்பட்டது. இந்திய வம்சாவளி மக்களில் ஒரு தொகுதியினர் தாயகம் திரும்பியமை, பிழையான பதிவுகள் உள்ளிட்ட பல காரணங்கள் இம்மக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி நிலை காணப்படுவதற்கு ஏதுக்களாக அமைந்தன. 1971 - 1984 இற்கு இடைப்பட்ட காலத்தில் 4,46,338 பேர் தாயகம் திரும்பியிருந்தமை நோக்கத்தக்கதாகும்.



இதேவேளை ஒரு சமூகம் பல்வேறு சாதக விளைவுகளையும் பெற்றுக் கொள்வதற்கு அச்சமூகம்சார் சனத்தொகை முக்கிய இடம் பிடிக்கின்றது. இந்த நிலையில் இந்திய வம்சாவளியினர் தொடர்பாக முன்வைக்கப்படும் சனத்தொகை குறித்த புள்ளிவிவரங்களில் சந்தேகமுள்ளதாக பேராசிரியர் ஏ.எஸ்.சந்திர போஷ் ஏற்கனவே சுட்டிக்காட்டி இருந்தார். இதேவேளை இலங்கைவாழ் 'இந்தியத் தமிழர்கள்' தம்மை 'இலங்கைத் தமிழர்' என்று அடையாளப்படுத்துவதற்கு உந்துசக்தியாக பல காரணிகள் விளங்குகின்றன.



நீண்ட காலமாக பிரசாவுரிமை இல்லாதிருந்த இந்தியத் தமிழர்கள் 1988 இல் பிரசாவுரிமையைப் பெற்றுக்கொண்ட நிலையில் மாற்றம் வேண்டும் என்பதற்காக இலங்கைத் தமிழர் என்று பதியலாயினர். இந்திய கடவுச்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# ஹமாஸ் மற்றும் இஸ்ரேலிய தலைவர்களைத் தண்டிக்க ஆயத்தமாகும்

# பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம்

தமிழில்: ஜெயந்திரன்

பாலஸ்தீனத்தின் நிலைமை தொடர்பாக, பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முதலாவது அறையில், கைது செய்வதற்கான உத்தரவைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை நான் இப்போது சமர்ப்பிக்கிறேன். எனக்குப் பின்னால் நின்றுகொண்டிருக்கின்ற சட்டத்தரணிகளில் ஒருவரான, பிரெண்டா ஜே ஹோலிஸ் (*Brenda J. Hollis*) , கடந்த இரு வருடங்களாக உக்ரேன் நிலைமை தொடர்பாக எங்களது பணிகளை முன்னெடுத்து வருவதுடன், இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து, பாலஸ்தீன நிலைமை தொடர்பான விசாரணைகளுக்கும் தலைமை தாங்குகிறார். மேலும் அண்மையில் எங்களோடு இணைந்திருக்கும் கிங்ஸ் கவுன்சில் என்னும் தகைமையைக் கொண்டிருக்கின்ற அண்ட்ரூ ஹேலி (*Andrew Haley*), பாலஸ்தீனத்தின் நிலைமை தொடர்பாக இப்போதும் எதிர்காலத்திலும் எமது பணிகளை முன்னெடுத்துச் செல்வார்.



எனது பணிமனையால் தொகுக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, ஆய்வுசெய்யப்பட்ட சான்றுகளின் அடிப்படையில், ஹமாசின் மூன்று உயர் தலைவர்களான யாயா சின்வார், மொஹமட் டயிவ், இஷ்மாயில் ஹனியா ஆகியோர் மேல், 2023ம் ஆண்டு ஒக்ரோபர் 7ம் திகதியிலிருந்து இஸ்ரேலிலும் பாலஸ்தீனத்திலும் இழைக்கப்பட்ட பின்வரும் பன்னாட்டுக் குற்றங்களுக்கான பொறுப்பு சுமத்தப்படுகிறது. மனிதகுலத்துக்கு எதிரான குற்றமாக வகைப்படுத்தப்படும் மக்களைக் கூட்டாக அழித்தல், மனிதகுலத்துக்கு எதிரான குற்றமும் போர்க்குற்றமுமான கொலை, போர்க்குற்றமாக வகைப்படுத்தப்படும் பணயக் கைதிகளைப் பிடித்துச் செல்லும் செயற்பாடு, மனிதகுலத்துக்கு எதிரான குற்றமும் போர்க் குற்றமுமான பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் போது மேற்கொள்ளப்படும் பாலியல் வன்புணர்வு, வேறு பாலியல் ரீதியிலான வன்முறைகள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றமும் போர்க்குற்றமுமாக வகைப்படுத்தப்படும் சித்திரவதை, மனித குலத்துக்கு எதிரான குற்றமாக வகைப்படுத்தப்படும் பணயக்கைதிகள் மீது மேற்கொள்ளப்படும் மனிதாயமற்ற செயற்பாடுகள், போர்க்குற்றமாக வகைப்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ள முடியாத பணயக் கைதிகளின் மாண்புக்கு எதிரான வகையில் அவர்களைக் கொடூரமாக நடத்தும் செயற்பாடுகள், எமது விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதற்போது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆயுதப் போரின் போது, இஸ்ரேலின் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக பரவலாகவும் கட்டமைக்கப்பட்ட வகையிலும் இவ்வாறான குற்றங்கள் ஹமாசாலும் ஏனைய ஆயுதக் குழுக்களாலும் இழைக்கப்பட்டன.

2023ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ம் திகதியன்று ஹமாசாலும் ஏனைய ஆயுதக் குழுக்களாலும், இஸ்ரேலின் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டதற்கு அவர்கள் மேல் தொடுக்கப்பட்ட ஏனைய தாக்குதல்களுக்கும் பணயக் கைதிகளாக அவர்களைப் பிடித்துச் சென்றதற்குமான குற்றவியல் பொறுப்பு இந்தத் தலைவர்கள் மேல் சுமத்தப்படுகிறது.

ஆகக் குறைந்தது ஆறு முக்கிய இடங்களில் உயிர்பிழைத்தவர்களையும், கண் கண்ட சாட்சிகளையும் செவ்வி கண்டு, இவ்வாறான சான்றுகளைத் திரட்டுவதில் எனது பணிமனை அயராது பணிபுரிந்திருக்கிறது. சிசிரிவி கமராக்கள் (*CCTV cameras*) மூலம் திரட்டப்பட்ட தரவுகள், உறுதிப்படுத்தப்பட்ட குரல் பதிவுகள், ஒளிப்படங்கள், காணொளிகள், நிபுணர்களின் சாட்சியங்கள், மற்றும் ஹமாசையும் ஏனைய ஆயுதக் குழுக்களையும் சேர்ந்தவர்களது கூற்றுகள் ஆகியவற்றிலிருந்து எமக்குக் கிடைத்த சான்றுகளை வைத்தே, இந்த விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2023ம் ஆண்டு ஒக்ரோ பர் 7ம் நாள், அன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை சின்வார், டயிவ், ஹனியா ஆகிய மூன்று தலைவர்களும், திட்டமிட்டது, தொடக்கியது மட்டுமன்றி தமது சொந்த வார்த்தைகள் மூலமும், செயல்கள் மூலமும் இத் தாக்குதல்களுக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உயர்தலைவர்கள் என்ற அடிப்படையிலும், இக்குற்றங்களை சேர்ந்து இழைத்தவர்கள் என்ற அடிப்படையிலும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்படுகிறது. இஸ்ரேலிலிருந்து, தமது இல்லங்களிலிருந்து, தமது சமூகங்களிலிருந்து பணயக்கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் மனிதாயமற்ற சூழ்நிலைகளில் வைக்கப்பட்டிருப்பதற்கும் அவர்களுள் ஒரு சிலர் பாலியல் வன்புணர்வு உட்பட மிக மோசமான பாலியல் வன்முறைகளுக்குஉள்ளாக்கப்பட்டிருப்பதற்கும் சான்றுகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன.

மருத்துவ அறிக்கைகள், இக்காலத்தில் எமக்குக் கிடைத்திருக்கும் காணொளிகள் மற்றும் ஆவணச் சான்றுகள், தாக்குதல்களில் உயிர்பிழைத்தவர்களின் வாக்குமூலங்கள் என்பவற்றை அடிப்படையாக வைத்து, ஒக்ரோபர் 7ம் திகதி இழைக்கப்பட்ட குற்றங்களையும், பாலியல் வன்முறைகள் தொடர்பாக எமக்குத் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கின்ற அறிக்கைகளையும் நாங்கள் தொடர்ச்சியாக ஆய்வு செய்துவருகிறோம்.

பணயக்கைதிகளாகப் பிடித்துச்செல்லப்பட்ட அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்துகிறேன். அவர்கள் அனைவரும் சேமமாக அவர்தம் குடும்பத்தினரிடம் கையளிக்கப்படவேண்டும். நல்ல மனச்சாட்சி மற்றும் அறநெறி என்பவற்றால் உந்தப்பட்டும், பன்னாட்டு மனிதாயச் சட்டத்தின் அடிப்படை யிலும், இந்த விடுதலை உடனேயாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும். பணயக்கைதிகள் உடனடியாக விடுதலைசெய்யப்பட வேண்டும்.

இதுமட்டுமன்றி, இன்னொரு விடயத்தையும் நான் இங்கு அறிவிக்கிறேன்.எனது பணிமனையால் திரட்டப்பட்டு, ஆய்வுசெய்யப்பட்ட சான்றுகளின் அடிப்டையில், இஸ்ரேலிய பிரதம மந்திரியான பெஞ்சமின் நெத்தன்யாகு (*Benjamin Nethanyahu*), பாதுகாப்பு அமைச்சர் யோஆவ் கலண்ட் (*Yoav Gallant*) , ஆகிய இருவர் மீதும், 2023ம் ஆண்டு ஒக்ரோபர் 8ம் திகதியிலிருந்து, பாலஸ்தீன தேசத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இழைக்கப்பட்ட பன்னாட்டுக்குற்றங்களுக்கான குற்றப்பொறுப்பு சுமத்தப்படுகிறது. மக்களைப் பட்டினிக்குள்ளாக்குவதை போரில் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துதல், அப்பாவிப் பொது மக்களுக்கு வேண்டுமென்று தாங்கொணாத் துன்பத்தை ஏற்படுத்துதல், உடலில் படுகாயத்தை ஏற்படுத்துதல், உடல் ஆரோக்கியத்துக்கு ஊறு விளைவித்தல், அல்லது குரூரமாக நடத்துதல், ஒருவரைக் கொலைசெய்ய வேண்டும் என்று முடிவுசெய்து அக்குறிப்பிட்ட நபரைக் கொலை செய்தல், ஓர் அப்பாவிப் பொதுமக்கள் சமூகத்துக்கு எதிராக வேண்டுமென்றே தாக்குதல்களைத் தொடுத்தல். அத்தோடு மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், ஒரு சமூகத்தை ஒட்டுமொத்தமாக அழித்தொழித்தல், பல்வேறு துன்புறுத்தல்கள், அத்துடன் மனிதாயத்துக்கு எதிரான வேறு குற்றங்களை இழைத்ததற்கான குற்றச்சாட்டுகள். காஸாவில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஆயுதப் போர்ப் பின்புலத்தில் அங்குள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான பரவலானதும், கட்டமைக்கப்பட்ட ரீதியிலானதுமான தாக்குதல்களின் ஒரு பகுதியாக ஒரு அரசின் கொள்கையாக இவ்வாறான குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. துரதிட்டவசமாக இவ்வாறான குற்றங்கள் இன்றும் தொடர்ந்து இழைக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடப்படவேண்டும்.



பொதுவாக வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டத்தின் அடிப்படையில், இங்கு குறிப்பிடப்பட்டதனிநபர்கள் மிகவும் ஒரு கட்டமைக்கப்பட்ட வகையில், மனிதர்கள் உயிர்பிழைப்பதற்கு அத்தியாவசியமாக இருக்கும் பொருட்கள் இந்த மக்களுக்குக் கிடைக்காமல் இவர்கள் தடுத்திருக்கிறார்கள். உயிர் பிழைத்தவர்களின் சாட்சியங்கள், ஏனைய கண்கண்ட சாட்சிகள், நிபுணர்கள், செய்மதி மூலம் பெறப்பட்ட படங்கள் இந்த விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்ட இருதனிநபர்களின் கூற்றுகள் போன்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே, இவ்வாறன ஒரு முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

அதுமட்டுமன்றி உறுதிப்படுத்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான காணொளிகள், ஒளிப்படங்கள், குரல் பதிவுகள் போன்ற ஆதாரங்களும் அடிப்படையாக எடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் பல சம்பவங்கள் அவற்றை நேரில் கண்ட

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தொடர்ந்து குறிவைக்கப்படும் தலைவர்கள்



## – போரின் புதிய திருப்பம் –

வேல்ஸில் இருந்து அருஸ்

கடந்த டிசம்பர் மாதம் சிரியாவில் உள்ள ஈரானின் தூதரகம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து ஈரான் சந்தித்த அடுத்த மிகப்பெரும் இழப்பு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற உலங்குவானூர்தி விபத்தாகும்.

இந்த விபத்தில் ஈரானின் அதிபர் இப்ராகீம் ரைசி மற்றும் வெளிவிவகார அமைச்சர் குசேன் அமீர், ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயத்தெல்லா கொசானியின் பிராத்தியோக பிரதிநிதி, ஈரான் அதிபரின் பாதுகாப்பு பிரிவின் தலைவரான மேஜர் ஜெனரல் தர அதிகாரி, இரண்டு கேணல் தர விமானிகள், தொழில்நுட்பவியலாளர் மற்றும் கிழக்கு ஆஜாபைஜானின் ஆளுநர் ஆகியோர் இந்த விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை ஆஜாபைஜானில் ஈரானின் உதவியுடன் அமைக்கப்படும் இரண்டு நீர்த்தேக்கங்களை திறந்துவைப்பதற்காக சென்ற அவர் அங்கு அந்த நாட்டின் தலைவரை சந்தித்ததுடன், இரு தலைவர்களும் திறப்புவிழா வில் பங்குபற்றியிருந்தனர். அதன் பின்னர் அங்கு பல நிகழ்வுகளில் கலந்துகொண்ட பின்னர் ஞாயிற்றுக்கிழமை காலை ரப்ரிஸ் அனைத்துலக விமானநிலையத்திற்கு வந்த அவர் அங்கிருந்து பெல்-212 ரக உலங்குவானூர்தி மூலம் 100 கி.மீ தொலையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் விழாவில் கலந்துகொள்வதற்கான சென்றிருந்தார்.

அதில் கலந்துகொண்ட பின்னர் மீண்டும் அதே பாதையால் திரும்பியபோது அவர் பயணித்த உலங்குவானூர்தி ரடார் திரையில் இருந்து மறைந்துள்ளது. அதன் பின்னர் 12 மணிநேர தேடுதலின் பின்னர் துருக்கியின் அகின்சி வகை ஆளில்லாத உளவு விமானம் தீப்பிடித்த உலங்குவானூர்தியின் வெப்பத்தின் கண்டறிந்து உலங்குவானூர்தி வீழ்ந்த இடத்தை கண்டுபிடித்திருந்தது.

இந்த நடவடிக்கையில் ஈரானின் 7 ஆளில்லாத விமானங்களும் பங்குபற்றியிருந்தன. ரஸ்யாவும் தனது பி.ஒ-105 வகை இரட்டை இயந்திர தேடுதல் சிறப்பு உலங்குவானூர்தியையும் ஐ.எல்-76 ரக விமானத்துடன் 60 சிறப்பு தேடுதல் படையினரையும் அனுப்பியிருந்தது.

கண்டுபிடிக்கப்பட்ட உலங்குவானூர்தி முற்றாக எரிந்துள்ளதுடன் சடலங்களும் அடையாளம்காணமுடியாதவாறு உள்ளன.

ஈரானின் ஆன்மீகத் தலைவரான அயத்தெல்லா கொசானிக்கு அடுத்த நிலையில் உள்ள தலைவர் ரைசி கொல்லப்பட்டது மிகப்பெரும் இழப்பாகும்.



அயத்தெல்லா கொசானி 1989 ஆம் ஆண்டில் இருந்து தலைவராக உள்ளார். ஆனால் தற்போது ரைசியின் மரணத்தில் மொசாட்டின் பங்களிப்பு உள்ளதா என்ற கேள்விகள் பல மட்டங்களிலும் எழுந்துள்ளன. கடந்த ஐந்து வருடங்களாக ஈரானுக்கு உள்ளும் வெளியிரும் பல அரசியல் பிரமுகர்கள் மற்றும் படைத்துறை தளபதிகளை இஸ்ரேலின் மொசாட்டும் அமெரிக்காவின் சி.ஐ.ஏயும் இணைந்து படுகொலை செய்திருந்தன.

கடந்த மாதம் இஸ்ரேல் மீது ஈரான் மேற்கொண்ட மிகப்பெரும் ஏவுகைணத் தாக்குதலின் பின்னர் அதன் அரச தலைவர் கொல்லப்பட்டுள்ளார். அதாவது பூகோள அரசியல் போர் உச்சம்பெற்றுள்ள நிலையில் இது நிகழ்ந்துள்ளது. அண்மைக்காலங்களில் ஈரான் மிக முக்கிய இரண்டு பேரை இழந்துள்ளது. 2020 ஆம் ஆண்டு ஜெனரல் சொலாமனி சி.ஐ.ஏயின் உளவு விமானம் மூலம் கொல்லப்பட்டிருந்தார். அதற்கு பதிலடியாக அமெரிக்கத் தளத்தை ஈரான் தாக்கியழித்திருந்தது. அரசியலில் இல்லாதபோதும் ஈரானில் இரண்டாவது மிகப்பெரும் தலைவராக சொலமனி கருதப்பட்டிருந்தார்.

அவரைப் போலவே ரைசியும் மிகவும் முக்கியமான தலைவராவார். தற்போதைய ஆன்மீகத் தலைவருக்கு 85 வயதாவதால் அவரின் இடத்தை நிரம்பும் தகுதி ரைசிக்கு உண்டு என கருதப்பட்டது. எனவே அவரின் இழப்பு மிகப்பெரும் இழப்பாகும். ஈரானின் மிக மூத்த படைத்தளபதியான ஜெனரல் சாயிட் மொசாவி கடந்த வருடம் டிசம்பர் மாதம் லெபனானில் வைத்து கொல்லப்பட்டிருந்தார். ஈரானின் மூத்த விஞ்ஞானியான மொளசீன் மஹாவடி 2020 ஆம் ஆண்டு கொல்லப்பட்டிருந்தார்.

அதாவது ஈரானின் முக்கிய தலைவர்கள் குறிவைத்து கொல்லப்படுகின்றனர். ரைசியின் உலங்குவானூர்தி புறப்பட்டதும் அமெரிக்காவின் சி-130 ரக விமானம் திடீரென ஆஜாபர்ஜானில் வந்து இறங்கியது பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.



அதாவது இந்த விமானத்தில் இருந்து இலத்திரனியல் சாதனங்கள் மூலம் உலங்குவானூர்தியின் கட்டுப்பாட்டை குழப்பியிருக்கலாம் அல்லது நிறுத்தியிருக்கலாம் என கருதப்படுகின்றது. 1970 களில் அமெரிக்காவிடம் இருந்து வாங்கிய பெல்-212 விமானத்தில் தான் ரைசி பயணித்துள்ளார். அந்த விமானத்தின் இலத்திரனியல் இயங்குமுறை அமெரிக்காவுக்கு பரிச்சியமானது.

கடந்த வருடம் ஈரானுக்கு ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன் வந்தபோது அவரின் விமானத்திற்கு பாதுகாப்பாக வந்த 4 எஸ்.யூ-35 ரக விமானங்கள் மத்தியதரைக் கடலில் நின்ற அமெரிக்காவின் விமானந்தாங்கி கப்பலின் இலத்திரனியல் சாதனங்களை குழப்பியதுடன்,

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

### தாய்வனைச்... தொடர்ச்சி ...

பீடங்களைக் கைப்பற்றுதல், முற்றுகையை ஏற்படுத்துதல் உட்பட பல படைத்துறை ஒத்திகை களை தாய்வானின் வெளிப்புறமும், உட்புறமும் தாம் மேற்கொண்டு வருவதாகவும் இந்த நடவடிக்கை தாய்வானின் விவகாரங்களில் தலையிடும் வெளிநாட்டு சக்திகளுக்கான எச்சரிக்கை எனவும் சீனாவின் படைத்துறைப் பேச்சாளர் லி சீ தெரிவித்துள்ளார்.

சீன படையினரை கண்காணிக்க கடற்படைக் கப்பல்கள், வான்படை விமானங்கள் மற்றும் ஏவுகணைப் படையினரை தைவான் அரசு நகர்த்தி வருவதற்கு பதிலடியாகவே இந்த படைத்துறை ஒத்திகை மேற்கொள்ளப்படுகின்றது.

சீனாவில் 1940 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டு போரைத் தொடர்ந்து தாய்வான் சுதந்திர மாநிலமாக இயங்கி வருகின்றது. ஆனால் அது அமெரிக்காவுடன் அதிக நெருக்கத்தை பேணிவருகின்றது.

ஆனால் புதிதாக பதவியேற்றுள்ள புதிய அரச தலைவர் சீனாவை நோக்கி தனி நாட்டுக்கான அறைகூவலை விடுத்துள்ளது தற்போதைய நிலையை தோற்றுவித்தள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### போரை எதிர் ... தொடர்ச்சி ...

வீடுகளில் இருந்து பாதுகாப்பாக வெளியேறுதல், அவசர நிலையில் தொடர்பு கொள்ளும் உறவினர்களின் தொலைபேசி இலக்கங்களை கைவசம் வைத்திருநத்தல், அடிப்படை முதலுதவி முறைகளை தெரிந்துவைத்திருத்தல்இ அதற்கான பொருட்களை வைத்திருத்தல், குறைந்தது 3 நாட்களக்கு தேவையான உணவு மற்றும் குடிநீரை சேமித்தல் போன்ற அறிவுறுத்தல்கள் அந்த இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

### தொடர்ந்து குறி ... தொடர்ச்சி ...

பூட்டினின் விமானத்திற்கு பாதுகாப்பையும் வழங்கியிருந்தன.

அதாவது மத்தியகிழக்கில் அமெரிக்கா இலத்திரனியல் போர் முறைகளை கையாண்டு வருவதாக ரஸ்யாவின் புலனாய்வுத்துறை சந்தேகித்திருந்தது.

மேலும் உக்ரைன் போரில் ரஸ்யாவின் கை ஓங்குவதும், காசா போரில் ஹமாஸை முறியடிக்க முயாமல் உள்ளதும், ஈரானின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இஸ்ரேலினால் பலமான பதிலடியை கொடுக்க முடியாது போனதும் மேற்குலகம் நேரிடையான போரை தவிர்த்து தனது புலனாய்வுத்துறை மூலம் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளதா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதற்கு அண்மையில் இடம்பெற்ற பல சம்பவங்கள் ஆதாரமாகவும் உள்ளன. கடந்த 7 ஆம் நாள் சவுதிஅரேபியாவின் இளவரசரை குறிவைத்து குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் 14 ஆம் நாள் துருக்கியில் ஒரு இராணுவப்புட்சி மேற்கொள்ளபட்டிருந்தது. ஆனால் அது முறியடிக்கபட்டிருந்தது. பின்னர் கடந்த 15 ஆம் நாள் ஸ்லோவாக்கியாவின் பிரதமர் சுடப்பட்டார், தற்போது 19 ஆம் நாள் ரைசி கொல்லப்பட்டுள்ளார்.

அதாவது மேற்குலகம் மற்றும் தெற்கு மண்டல நாடுகளுக்கு இடையிலான தற்போதைய சமரில் தெற்கு மண்டல நாடுகளின் தலைவர்கள் பலர் அடுத்தடுத்து குறிவைக்கப்பட்டுள்ளனர்.

அதாவது இந்த நடைமுறையை தெற்கு மண்டல நாடுகளும் பின்பற்றினால் உலகம் மூன்றாவது உலகப்போரை நோக்கி செல்வதை யாராலும் தடுக்க முடியாது என்பது யதார்த்தம்.

• • •

### வெற்றிக்காக ... தொடர்ச்சி ...

இந்த விளம்பரங்கள் பல மாதங்களாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விளம்பரங்களுக்கு இந்திய மக்களின் வரிப்ப ணத் தையே இந்திய அரசு செல விட்டு வருகின்றது. தேர்தல் நடந்துவரும் நிலையில் பல நிறுவனங்களின் மூலம் மோடி அரசு அதனை மேற்கொண்டு வருகின்றது. இந்திய அரசின் தொலைதொடர்பு நிறுவனம் 387 மில்லியன் ரூபாய்களை இந்த விளம்பரங்களுக்கு செலவிட்டுள்ளது.

தேர்தல் ஆரம்பமாவதற்கு முன்னர் கடந்த வருடமே மோடி அரசு சிபி.சி என்ற நிறுவனத்திற்கான நிதியை 275 விகிதமாக அதிகரித்திருந்தது. அது 2 பில்லியன் ரூபாய்களில் இருந்து 7.5 பில்லியன் ரூபாய்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தநிறுவனமே அதிகளவான நிதியை கூகுள் இணையத்தளத்திற்கு வழங்குகின்றது.

### பாலஸ்தீனத்தில் ... தொடர்ச்சி ...

அளித்ததைப்போல பல நாடுகள் ஆதரவுகளை வழங்க லாம். இஸ்ரேலு டனான உறவுகளை நாம் முறித்துள்ளோம், அங்கிருந்த தூது வர் திரும்ப அழைக்கப்பட்டுள் ளார். கடந்த 3 ஆம் நாளுடன் தூதரகம் மூடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த புதிய கொலம்பிய அதிபர் இஸ்ரேல்-பாலஸ்த்தீனப் போரின் ஆரம்பத்தில் இருந்தே இஸ்ரேலுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டடை எடுத்து வருகின்றார். லத்தீன் அமெரிக்காவில் இஸ்ரேலுக்கு எதிராக கடும்போக்குள்ள நாடாக அது உள்ளது.

இஸ்ரேலுடனான இரஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்ட முதலாவது லத்தீன் அமெரிக்க நாடு கொலம்பியாவாகும். அதன் பின்னர் சிலி, பொலிவியா மற்றும் ஹொன்டுரஸ் ஆகிய நாடுகள் தமது தூதுவர்களை மீள அழைத்திருந்தன. இஸ்ரேலுக்கு எதிராக தென்னாபிரிக்கா மேற்கொண்டுவரும் இனப்படுகொலை வழக்கில் இணைந்துகொள்ளவும் கொலம்பியா விருப்பம் தெரிவித்திருந்தது.

கடந்த புதன்கிழமை(22) நோர்வே, அயர்லாந்து மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் பாலஸ்தீனத்தை நாடாக அங்கீகரித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### இராணுவத்திடம் ... தொடர்ச்சி ...

உங்களுக்கு தெரியாது, பாதிக்கப்பட்டவர்களுக்கு பல வருடங்களுக்கு இந்த வலி தொடரும் – மரணத்தைவிட இது வலிமிகுந்தது. வலியும் வேதனையும் மிக மோசமானதாகக் காணப்படும் உளவியல் சித்திரவதை. நாளாந் தம் – ஒவ்வொரு நாளும் – ஒவ்வொரு வாரமும் – தசாப்தங்களாக இந்த வலியும் வேதனையும் தொடரும். இது இலங்கைமீது விழுந்த கறை. இந்தக் கறையை அகற்ற ஒவ்வொரு இலங்கை பிரஜையும் முன்வரவேண்டும். அந்த குழந்தைகள் எங்கே? நான்கைந்து மாத குழந்தைகள் – மூன்று – நான்கு வயதானவர்கள். நான் அவர்களின் படங்களைப் பார்த்திருக்கின்றேன். 15 வருடங்களாகியும் பதில் இல்லை – இது மிக நீண்டகாலம். இது மன்னிக்க முடியாத குற்றம் – இவர்கள் குறித்து அரசாங்கம் பதிலளிக்கவேண்டும்.

இவர்கள் தாங்களாக முன்வந்து சரணடைந்தவர்கள். சரணடைவதற்கான பகுதிக்கு தாங்களாக சென்று சரணடைந்தார்கள். அவர்களின் குழந்தைகள் எங்கே – அவர்களுக்கு என்ன நடந்தது?” என்றும் கேட்டார்.

### காற்றாலையால் ... தொடர்ச்சி ...

நேரடியாக அனுபவிக்கின்றார்கள்.

குறிப்பாக, மீன்பிடிச் சமூகம் அவர்கள் பிடிக்கும் மீன்களின் தொகைகளில் மாற்றம் காணப்பட்டு குறைகின்றமை. நீரோட்டங்களின் திசைகள் வழமை போல் இல்லாது மாற்றமடைவது உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளால் பிடிக்கப்படுகிற மீன்களின் தொகை பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக கரைவலை மீன்பிடி சம்பந்தமான முறையில் பாரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதை வைத்தும், வேறு பல விஷயங்களை வைத்தும் காற்றாலையினை அமைப்பது மன்னார் தீவுக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது புலனாகின்றது.

எனவே, இவ்விடயங்களை உடனடியாக கவனத்தில் எடுப்போம். ஏற்கனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒன்று நீதிமன்றத்தை நாடியுள்ளது. இதனடிப்படையில் மன்னாரில் இருந்து மக்கள் சார்பாகவும் இவ்வாறான ஒரு செயல் திட்டத்தை அவர்களுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு நாங்கள் எதிர்வரும் வாரத்தில் நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம்” எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.



## ஹமாஸ் மற்றும்... தொடர்ச்சி ...

சாட்சிகளால் பதிவுசெய்யப்பட்டவை.'காஸாவை முற்றுமுழுதான ஒரு முற்றுகைக்குள் கொண்டு வரவேண்டும்' என்று மேற்கொள்ளப்பட்ட ஒரு முடிவைத் தொடர்ந்து, மக்களின் அத்தியாவசியமான பொருட்கள் மறுக்கப்பட்டன. றாவா *(Rafah)* , கரம் ஷலோம், *(Kerem Shalom)* ஏறெஸ் *(Erez)* ஆகிய மூன்று எல்லைக்கடவைகளும் நீண்ட காலமாக மூடிவைக்கப்பட்டிருந்தன. இன்னும் எல்லைக் கடவைகள் திறக்கப்பட்ட பின்னரும், உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் போக்குவரத்தைத் தடைசெய்தமை. மேலும் காஸாவில் வாழும் மக்களுக்கு குடிநீர் விநியோகத்துக்கு அத்தியாவசியமான இஸ்ரேலிலிருந்து காஸாவுக்குச் செல்கின்ற குடிநீர் குழாய்களை வெட்டியமை. 2023ம் ஆண்டு ஒக்ரோபர் 9ம் திகதியிலிருந்து தொடர்ந்து பல நாட்கள் இவ்வாறான குடிநீர் விநியோகம் தடைசெய்யப்பட்டிருந்தது. மேலும் ஒக்ரோபர் 8ம் திகதியிலிருந்து இன்று வரை, காஸாவுக்கான மின்விநியோகமும் துண்டிக்கப்பட்டிருக்கிறது. அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைத் தாக்குதல்களுடன் சேர்த்து, உணவுக்காக வரிசையில் காத்துநின்ற மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுடன், இவ்வாறான தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

மனிதாபிமான அமைப்புகளால் பொது மக்களுக்கென மேற்கொள்ளப்பட்டஉதவி விநியோகம் தடுக்கப்பட்டது. உதவிப் பணியாளர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. உதவிப் பணியாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் காரணமாக பல உதவி அமைப்புகள்தமது செயற்பாடுகளைக் குறைத்துக்கொண்டன அல்லது முற்றாக நிறுத்தின. காஸாவில் வாழும் அப்பாவிப் பொதுமக்கள் மீது பட்டினி ஓர் போராயுதமாக பயன்படுத்தப்பட்டமை மிகவும் மோசமான விளைவுகளைத் தோற்றுவித்திருக்கின்றது. இதனை மிகவும் தெளிவாகவே பார்க்கக் கூடியதாக இருப்பது மட்டுமன்றி பரவலாக அறியப்பட்டிருப்பது மட்டுமன்றி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மருத்துவர்கள் உள்ளிட்ட பல சாட்சிகளாலும் பாதிக்கப்பட்டவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது,

உணவைத் தடைசெய்ததன் காரணமாக சாவுகள், ஊட்டச்சத்துக் குறைபாடு, நீரிழப்பு போன்ற விளைவுகள் ஏற்பட்டிருப்பதுடன், அப்பாவிப் பொதுமக்கள் மத்தியில் மிகவும் ஆழமான வேதனைகளையும் துன்பங்களையும் அவை ஏற்படுத்தியிருக்கின்றன. காஸாவின் சில பிரதேசங்களில் பட்டினிச் சாவை ஏற்கனவே பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறான குற்றங்களுக்கு அதிகாரிகள் என்ற வகையிலும் சேர்ந்து குற்றம் இழைத்தவர்கள் என்ற வகையிலும் நெத்தன்யாகுவும், கலண்டும் குற்றப் பொறுப்பை ஏற்கிறார்கள். எல்லாத் தேசங்களைப் போலவே தனது மக்களைப் பாதுகாப்பதற்கு, இஸ்ரேலுக்கு அனைத்து உரிமையும் உண்டு. பணயக் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் பாதுகாப்பாகத் திரும்புவதை உறுதிப்படுத்துவதற்கும் அதற்கு எல்லா உரிமையும் உண்டு. பணயக் கைதிகள் மிகவும் மோசமான முறையில் கொண்டுசெல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இவ்வாறான உரிமைகள் பன்னாட்டு மனிதாய சட்டங்களைக் கடைப்பிடிப்பதிலிருந்து எந்த வகையிலும் இஸ்ரேலுக்கு விதிவிலக்கை அளிக்காது. ஏராளமான பெண்களையும் சிறுவர்களையும் உள்ளடக்கிய அப்பாவிப் பொதுமக்களுக்கு வேண்டுமென்றே சாவையும் பட்டினியையும் துன்பத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்ற சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்காது.

தமது இராணுவ மற்றும் அரசியல் இலக்கை அடைவதற்கு இவ்வாறானவற்றைப் பயன்படுத்துதல் பன்னாட்டு மனிதாயத்துக்கு எதிரான குற்றம் என்கிற குற்றச்சாட்டையே நாங்கள் முன்வைக்கிறோம். கடந்த வருடத்திலிருந்து இந்த வருடம் வரை எகிப்து, இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய இடங்களில் நான் கோடிட்டுக் காட்டியது போன்று, சட்டத்தைக் கடைப்பிடிக்கத் தவறுபவர்கள் மீது தகுந்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, எனது பணிமனை நடவடிக்கை எடுக்கும் போது முறையிடுவதில் எந்தப் பயனும் இல்லை. நடவடிக்கை எடுக்கும் நேரம் வந்துவிட்டது என்பதை இப்போது அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன். பன்னாட்டுச் சட்டங்களாக இருந்தாலும் ஆயுதப் போர் தொடர்பான சட்டங்களாக இருந்தாலும் அவை எல்லோருக்கும் பொருந்தும். எந்தவொரு சிப்பாயோ, எந்தவொரு கட்டளை அதிகாரியோ, எந்தவொரு பொதுமக்கள் தலைவரோ அவர்கள் யாராக இருந்தாலும் குற்றம் இழைத்தால் தண்டனையை அனுபவித்துத் தான் ஆகவேண்டும். பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் முதியவர்கள் இளையவர்கள் உள்ளிட்ட மனித உயிர்கள், உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான பொருட்களை வேண்டுமென்றே தடைசெய்வதை எதுவுமே நியாயப்படுத்த முடியாது. மனிதர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்துச்செல்வதை எதுவும் நியாய்படுத்த முடியாது. அல்லது அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்குவதை எதுவும் நியாயப்படுத்த முடியாது.

சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்வதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதில் உரிய நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கிறதா என்பதை இந்த பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் சுதந்திர நீதியாளர்கள் முடிவுசெய்வார்கள். பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் நீதியாளர்கள் இக்கடமையைச் செய்வதற்கும், நாங்கள் தொகுத்து வழங்கியிருக்கும் சான்றுகளை, எந்த வித பக்கச்சார்பும் இன்றி ஆய்வுசெய்வதற்கும் உரிய சுதந்திரம் அவர்களுக்கு இப்போது வழங்கப்படவேண்டும். மதிப்புக்குரிய நீதியாளர்கள் எனது விண்ணப்பங்களை அங்கீகரித்து, வேண்டிய கைது உத்தரவைப் பிறப்பிப்பார்களாக இருந்தால், நீதிமன்றத்தின் பதிவாளருடன் இணைந்து மிக நெருக்கமாக நான் பணியாற்றுவேன். உரோமைச் சாசனத்தில் ஒப்பமிட்ட நாடுகள் அனைத்தும் இந்த விண்ணப்பங்களுக்கும் தொடர்ந்து வரக்கூடிய கைது உத்தரவுகளுக்கும் ஆதரவைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். உலகில் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட அதே காத்திரத் தன்மையுடன் இவ்விடயமும் கையாளப்படும். நீதியை நிலைநாட்டுவதிலும், குற்றமிழைத்தவர்களைத் தண்டிக்கும் இந்தப் பொதுவான பயணத்திலும், தேசங்கள் அல்லாத ஏனைய அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறான ஒரு பின்புலத்தில், நீதிமன்றத்தின் அனைத்துப் பிரிவுகளிலும். முழுச் சுதந்திரத்துடனும் பாரபட்சம் இன்றியும் உரிய பணிகளைத் தொடர்ந்து ஆற்ற, எனது பணிமனை இடமளிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றேன். இந்த நீதிமன்றத்தைச் சேர்ந்த அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறை ஏற்படுத்துவதோ, அல்லது அவர்களை அச்சுறுத்துவதோ, அல்லது பொருத்தமற்ற செல்வாக்கைச் செலுத்துவதோ, உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் தொடருமாயின், உரோமைச் சாசனத்தின் 70வது சரத்தில் உள்ள விடயங்களுக்கேற்ப நடவடிக்கை எடுக்க எனது பணிமனை எந்தவிதத்திலும் தயங்காது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தால், சுதந்திரமான பாரபட்சமற்ற விசாரணைகளைத் தொடர்ந்து, குற்றஞ்சாட்டுவதற்கான உண்மையான காரணம் இருக்குமாயின் அவ்வாறான செயற்பாடுகளை முனனெடுப்போர் மீதும் கைது உத்தரவுகளுக்கான விண்ணப்பங்களை நாங்கள் சமர்ப்பிப்போம்.

ஒக்ரோபர் 7ம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பின்புலத்தில், மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடாபாக எமக்குக் கிடைத்த அறிக்கைகளைத் தொடர்ந்தும் விசாரணைகளை நாம் முன்னெடுத்து வருகிறோம்.

மேலும் பல அப்பாவிப் பொதுமக்களின் சாவடைவதற்கும், படுகாயமடைவதற்கும் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாவதற்குக் காரணமான பாரிய அளவிலான குண்டுவீச்சுதல்கள் தொடர்பாக எந்தவித தாமதமும் இன்றி பன்னாட்டுச் சட்டங்களுக்கு அமைவாக அடிப்படை விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இழைக்கப்பட்டதாகக் கருதப்படும் குற்றங்கள் தொடர்பாகவும், குற்றங்களை இழைத்த குற்றவாளிகள் தொடர்பாகவும், வேண்டிய நடவடிக்கைகளை நாம் எடுக்கும் போது,' *Principle of Complementarity'* என்ற தத்துவத்தை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதனை எனது பணிமனை தொடர்ந்து மதிப்பீடு செய்து கொண்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட நாட்டின் தேசிய அதிகாரிகள் தமது கடமையை இதயசுத்தியுடன் நிறைவேற்றும் போது மட்டும் தான் இந்த விதிமுறை நடைமுறைப்படுத்தப்படும். எப்போது விசாரணையை அவர்கள் சுதந்திரமாகவும் எந்தவித பாரபட்சமும் இன்றி மேற்கொள்ளுகின்றார்களோ, எப்போது குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறலலில் இருந்து பாதுகாக்க முயலாமல் இருக்கிறார்களோ, அப்போது தான் இந்தக் கொள்கையை நாங்கள் நடைமுறைப்படுத்தலாம். இந்த விண்ணப்பங்களுக்குப் பின்னாலுள்ள கொள்கைகளையும் செயற்பாடுகளையும் கவனத்தில் எடுத்து விசாரணை எந்தவிடயத்தையும் தவறவிடாமல் முழுமையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு செய்தியை இன்று மிகவும் தெளிவாக நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். சட்டத்தைச் சரிசமனாக நடைமுறைப்படுத்துகிறோம் என்பதை நாம் வெளிப்படுத்தாவிட்டால், சட்டத்தைப் பாரபட்சமான முறையில் நாம் நடைமுறைப்படுத்துவோமாக இருந்தால், சட்டத்தின் ஆட்சி முற்றுமுழுதாக நிலைகுலையும் ஒரு சூழலையே நாம் உருவாக்குவோம். அவ்வாறு செய்வதன் மூலம், எங்களை, அதாவது எல்லா சமூகங்களையும், எல்லா தனிநபர்களையும் ஒன்றாக இணைத்து, ஓர் உறுதித்தன்மையை ஏற்படுத்தும் பிணைப்புகளையும் நாம் இழந்து விடுவோம். துன்பங்கள் நேரும் போது, இவ்வாறான ஒரு பாதுகாப்பு வலையமைப்பையே பாதிக்கப்படுபவர்கள் எதிர்பார்க்கிறார்கள். பெரும் ஆபத்து நிறைந்த இந்த வேளையில் இவ்வாறான ஒரு சவாலை நாம் எதிர்கொள்கிறோம். முன்னெப்போதும் இல்லாத வகையில், போர் நிகழும் போது, பன்னாட்டு மனிதாயச் சட்டம் எல்லா மனித நடத்தைகளையும் நெறிப்படுத்தும் என்பதை நாம் கூட்டாக நிரூபித்துக்காட்ட வேண்டும். இது எல்லாத் தனிநபர்களுக்கும் பொருந்தும். அதுமட்டுமன்றி, எனது பணிமனையும் நீதிமன்றமும் கையாளும் எல்லாச் சூழல்களுக்கும் பொருந்தும். இவ்வாறு தான், எல்லா மனிதர்களின் உயிரும் உலகின் எந்தப் பாகத்தில் அவர்கள் இருந்தாலும் அவற்றுக்குச் சமனான பெறுமதி உண்டு என்பதை நாம் நடைமுறையில் நிரூபித்துக்காட்ட முடியும்.

**நன்றி: யுரியூப் காணொளி**

## முன்னோக்கிய ... தொடர்ச்சி ...

சீட்டுக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் இலங்கை பிரசாவுரிமைக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் இடையில் ஒரு வேறுபாடு இருக்க வேண்டும் என்று சிந்தித்த இலங்கை வாழ் இந்தியத் தமிழர்கள் தம்மை இலங்கைத் தமிழர் என்று அடையாளப்படுத்தினர். இலங்கையில் 1983 இனக்கலவரத்திற்குப் பின்னர் பிறந்த இந்தியத் தமிழர்களின் பிள்ளைகளுக்கும், இந்தியாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாதிருந்தது. அத்தகையோர் தாங்கள் இலங்கையில் பிறந்ததால் இலங்கைத் தமிழர் என்று பதிவுகளை மேற்கொண்டனர்.

மக்கள் தொகை கணக்கெடுப்புப் படிவத்தின் பி8 ஆம் பகுதியில் இலங்கையில் வாழும் எல்லா இனங்களையும் குறிப்பிட்டு தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. அதில் இந்தியத் தமிழர் என்ற இனவரையறையும் உள்ளது. இந்த நிலையில் கணக்கெடுப்பை மேற்கொண்டவர்கள் தமிழர்கள் என்றால் இலங்கைத் தமிழர்கள்தான் என்று தாமாகவே அடையாளமிட்டுக் கொண்டனர். இத்தகைய நிலைமைகள் பலவும் இந்தியத் தமிழர்கள் பற்றிய சரியான மதிப்பீட்டுக்கு இடையூறை ஏற்படுத்தின. எனவே கணக்கெடுப்பின்போது இத்தகைய பிழைகள் களையப்படுவதோடு, இந்தியத் தமிழர்கள் எல்லா ஆவணங்களிலும் இந்தியத் தமிழர் என்ற அடையாளத்தையே பேணவேண்டியது அவசியமாகும் என்று பேராசிரியர் சந்திரபோஷ் குறிப்பிடுகின்றார்.

### முன்னேற்றகரமான போக்கு

இந்திய வம்சாவளி மக்கள் இந்நாட்டின் தேசிய வருமானத்தில் காத்திரமான வகிபாகத்தினைக் கொண்டுள்ளனர். இவர்களால் தேசம் செழுமையுறுகின்றது. தனித்துவமான கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை இவர்கள் கொண்டுள்ள நிலையில் தனித்தேசிய இனமாக இம்மக்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவும் வேண்டும் என்றும் கருத்து வெப்பாடுகள் இருந்து வருகின்றன. பெருந்தோட்ட மக்கள் காலங்காலமாக அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலை மாற்றப்பட வேண்டும். ஏனைய சமூகத்தினரைப் போன்று நிம்மதியாக வாழக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். அவர்களின் அடிப்படை பிரச்சினையான காணியுரிமை மற்றும் வீட்டுரிமை என்பன பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தல்கள் உள்ளன. இதேவேளை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்குரிய காணிகளை உறுதிப் பத்திரத்துடன் ஒப்படைக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு கண்டியை மையமாகக் கொண்டியங்கும் ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் தலவாக்கலை பிரதேச செயலகத்தில் அண்மையில் மனுவொன்றையும் கையளித்திருந்தது.

இதனிடையே மலையக மக்களை தொடர்ந்தும் மலையகத் தமிழர்களாகவோ அல்லது தோட்டப்புற மக்களாகவோ வாழவைப்பதற்குப் பதிலாக இலங்கை சமூகத்தில் ஏனைய மக்களுடன் ஒன்றிணைப்பதே தமது எதிர்பார்ப்பாகும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மேலும் பெருந்தோட்டத் துறையில் புரட்சிமிக்க மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாகவும் இதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தமையும் தெரிந்ததேயாகும்.

இந்திய வம்சாவளி மக்கள் கடந்து வந்த பாதை மிகவும் கடுமையானதாகும். இப்பாதையில் அவர்கள் பல்வேறு இடர்களையும் சவால்களையும் சந்தித்துள்ளனர். எனினும் சமகாலத்தில் அவர்களின் வாழ்க்கை நிலையில் ஒரு முன்னேற்றகரமான போக்கு காணப்படுகின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை. பல்வேறு துறைகளிலும் அவர்கள் கோலோச்சி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். இந்நிலையில் இம்மக்களின் எழுச்சி தொடர்பில் 'கோபியோ' அமைப்பின் தலைவர் குமார் நடேசன் கருத்து வெளியிட்டுள்ளதோடு, இந்திய வம்சாவளியினரின் இலங்கை வருகையை ஆவணப்படுத்துவதற்கு இந்தியா உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய வம்சாவளியினர் இலங்கை உள்ளடங்கலாக உலக நாடுகள் எங்கிலும் பல உயர் பதவிகளை வகித்து வருகின்றனர். இவர்கள் உலக நாடுகளில் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும், மைக்ரோசொஃப்ட் , கூகுள், உலகவங்கி போன்ற கட்டமைப்புக்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாகவும் கடமையாற்றி வருகின்றனர். இலங்கையிலும் இந்திய வம்சாவளியினர் நீதித்துறை, அமைச்சரவை அமைச்சர்கள், ஆளுநர்கள், போன்ற உயர் பதவிகளை வகிப்பதுடன் ஆடைகள் கைத்தொழில், தேயிலைக் கைத்தொழில், மருந்து உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றனர். 'கோபியோ' அமைப்பானது இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரை ஒருங்கிணைத்து, பொதுவான அக்கறைக்குரிய விவகாரங்களில் ஒத்துழைப்பை கட்டியெழுப்பும் நோக்கில் கடந்த 2000 மாம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இவ்வாறானதொரு பின்னணியில் சுமார் 250 வருடங்களுக்கு முன்னர் இந்தியர்கள் தொழில் வல்லுனர்களாகவோ, வர்த்தகர்களாகவோ, வங்கியாளர்களாகவோ,

தேயிலைத் தோட்ட தொழிலாளர்களாகவோ, இலங்கையை வந்தடைந்தமை தொடர்பான வரலாற்று ஆவணமொன்றை எதிர்வரும்காலத்தில்உருவாக்குவதற்குஇந்தியாஉதவ வேண்டுமெனவும் குமார் நடேசன் கோரிக்கை விடுத்திருக்கின்றார். இந்திய வம்சாவளி மக்களின் வாழ்க்கை போக்குகள் வேகமாக மாறிவரும் நிலையில் கோபியோ அமைப்பின் தலைவர் குமார் நடேசனின் கோரிக்கை மிகவும் முக்கியத்துவமிக்கதாகும். பின்வரும் சந்ததியினர் தாம் சார்ந்த சமூகத்தின் வாழ்வியல் போக்குகளை அறிந்து கொள்வதற்கும், முன்னோக்கிய நகர்விற்கும் சமூகம் சார் ஆவணப்படுத்தல் மிகவும் இன்றியமையாததாகும். எனவே ஆவணப்படுத்தலை சாத்தியப்படுத்த இந்தியா ஒத்துழைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

• • •

## அனைத்துலக ... தொடர்ச்சி ...

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களே உள்நுழையமுடியாத மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பகுதியில் வெளிமாவட்டங்களை சேர்ந்த சிங்கள பெரும்பான்மையினத்தவர்கள் இலகுவாக வந்து காணிகளை பிடிக்கும் ஏற்பாடுகளை பாதுகாப்பு தரப்பினரும் பொலிஸாரும் முன்னெடுக்கும் நிலைமையே காணப்படுகின்றது. குறைந்தது இதனை தடுப்பதற்கு கால்நடை பண்ணையாளர்களுடன் இணைந்து போராடுவதற்கு கூட யாரும் அற்ற நிலையிலேயே தமிழர்கள் உள்ளார்கள் என்பது எவ்வளவு கவலையான விடயம் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இதன்காரணமாக வடகிழக்கு இணைந்த கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்பதை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். ஜனாதிபதி தேர்தலை ஒட்டி மிகவேகமாக உருப்பெற்றுள்ள வடகிழக்கு மாகாணசிவில் கட்டமைப்பானது தமிழர்களின் பிரச்சினைகளையொட்டி உருவாகியிருந்தால் அது தொடர்பில் நாங்கள் நம்பிக்கைகொள்ளமுடியும். ஆனால் ஒரு தேர்தல் அரசியலை முன்னிறுத்தி உருவாக்கப்பட்டுள்ள கட்டமைப்பினால் தமிழர்களின் தமிழ் தேசியம் சார்ந்த பிரச்சினையை பேசமுடியுமா என்பது கேள்வியாகவே உள்ளது.

இன்று கிழக்கு மாகாண ஆளுனர் தலைமையில் ஒருபுறம் காணிகள் அபகரிக்கப்பட்டு தென்னிலங்கையினை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிலையில் மறுபுறம் அத்துமீறிய காணி அபகரிப்புகளும் திட்டமிட்ட குடியேற்றங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் இனப்பரம்பலை சிதைப்பதற்கு முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடுகளை தடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகள தடுத்து நிறுத்துவதற்கு ஒரு கட்டமைப்பின் ஊடாக நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும்.

இன்று சர்வதேசத்திற்கும் வடகிழக்கு மக்களுக்கும் உண்மையான விடயங்களை எடுத்துக்கூறுவதற்கு உளமார்ந்த சிவில் அமைப்பு ஒன்று அமைக்கப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதன் மூலமே நாங்கள் உண்மையான நம்பிக்கையினை பெற்றுக்கொள்ள முடியும்.

• • •

## இலங்கையின் ... தொடர்ச்சி ...

வெளியிட்டபோது அதில் கிரபைட்டும் உள்ளடக்கப்பட்டிருந் தது.

இந்தியாவின் *Coal India, NMDC, ONGC Videsh Ltd (OVL)* போன்ற நிறுவனங்கள் வெளிநாடுகளில் கனிமவளங்களை தேடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## தமிழர்களின்... தொடர்ச்சி ...

பெருங்கதவைக் கொத்தித் திறந்துகொண்டு உள்ளே புகுந்து அட்டூழியங்கள் புரிந்தனர். தெற்காசியாவில் மிகப்பெரும் நூலகமாகக் கருதப்படும் யாழ் நூலகத் தில் சுமார் 97ஆயிரம் அரிய புத்தகங்கள் காணப்பட்டன.பல நூற்றாண்டுகள் பழமை கொண்ட ஓலைச்சுவடி கள், ஈழத்தின் பண்டைய நூல்கள், பல அரிய பண்டைய தமிழ் நூல்கள், ஆரம்ப காலத்தில் இருந்து வெளிவந்த ஈழத்தமிழ் பத்திரிகைகளின் மூலப் பிரதிகள்,சிறுவர் நூல்கள் என்று பல்வேறு வகைப்பட்ட அரிய ஆவணங்களுக்குப் பெற் றோல் ஊற்றி எரித்தழித்தனர். நூலகத்தினுள் சாம்பல் குவியல்களே எஞ்சிக்கிடந்தன. அந்தச் சாம்பல் குவியல்களுக்குள்ளே எரி யாத நூல்கள் ஏதேனும் எஞ்சியிருக்குமோ என்ற அங்கலாய்ப்பில்,நூலக உதவியாளர்களான சு.யோ.இமானுவேலும், அ.டொன் பொஸ்கோவும், ச.கந்தை யாவும் சாம்பல் குவியல்களைக்கிளறிக்கொண்டிருந்தர். ஆனால் நூலகம் கருகிச் சாம்பல் பூர்த்துப் போய் இருந்தது.

**தொடரும்**

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.